88 August
விஞ்ஞானப் பிரிவு
வகுப்புக்கள்
பிரிவு II
விரைவில் ஆரம்பம்
விண்ணப்பங்கள்
ஏற்கப்படுகின்றன.
விபரங்களுக்கு:
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ. 2/=

Physics: திரு. வர்ணம்
Chemistry: திரு. தில்லைநாதன்
Botany: திரு. குகாதரன்
Zoology: திரு. நாகநாதன்
Pure & Applied Maths: திரு. தல்லையா
விபரங்களுக்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

மலை:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞூ மாசி மீ 24 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 26 (08-03-1986) -SANJEAVY- REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:7

### கருத்துக் கலசம்

இன்று சிவராத்திரித் திருநாள். சிவனுக்கு உரிய இராத்திரி, சிவன் இராத்திரி.

அண்ட சராசரங்களுக்கும் அதிபதியான பரம்பொருளை – பரமசிவனை, அவன் மகத்துவத்தை, பேராற்றலை உணர்த்திய திருநாள்.

சிவனுடைய அடியையும் முடியையும், விஷ்ணுவும் பிரம்மாவும் தேடினார்கள் என்பது கதை.

நான் என்ற மமதை- ஆணவம் நீங்கி ஆண்டவன் அருமையை உணர வைக்கும் கதை அது.

எங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி உண்டு என்ற உண்மையை உரைக்கும் கதை அது. தத்துவமும் அதுவே.

அந்தத் தத்துவத்தை மனிதன் வருடத்தில் ஒரு நாளாவது உணர வேண்டும். அதற்காக சிவனை நினைந்து, அவன் அருளை, சக்தியை மெச்சி இரவு விழிக்கும் வழக்கம் வந்திருக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த மட்டில் இப்போது அவர்களுக்கு நித்தமும் சிவராத்திரி தான்.

வானத்தில் ஏதாவது சத்தமிட்டால் அன்று இரவு முழுவதும் விழிப்பு. அயற் கிராமத்தில் பகலில் வான ஊர்தி வந்து சென்றது என்று கேள்வியுற்றால் இரவு முழுக்க கண் அயர் வில்லை.

கண் விழித்திருக்கும் போது ஆண்டவனைத் தான் வேண்டுகிறார்கள்.

ஆகவே கடந்த பல மாதங்களாக தினமும் சிவராத்திரி அனுஷ்டிக்கிறார்கள் ஈழத் தமிழ் மக்கள்.

தங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி இருக்கிறது. அது தங்களுக்குத் துணைபுரியும் என மன நம்பிக்கை கொள்கிறார்கள். அந்த நம்பிக்கைகள் சேர்ந்து நம்பிக்கையான எதிர்காலத்தை அவர்களுக்குத் தரும் என நம்புவோமாக.

அரசாங்கம் ஆணவம் மிகுந்து சித்தம் கெட்டுத் தடுமாறுகிறது.

"நமக்கும் மேலே ஒருவனடா, அவன் நாலும் தெரிந்த தலைவனடா, தினம் நாடகமாடும் கலைஞனடா" என்பது அவர்களுக்குப் புரிய வைக்கப்பட வேண்டும்.

அது தெரியாமல் தான் அரசாங்கக் கூலிகள் ஆலயங்களிலும் கை வைக்கிறார்கள்.

ஆணவம் அடங்கியே தீரும். ஆண்டவன் அதனை அடக்காமல் விடமாட்டான். ஏதோ ஒரு வடிவில், உருவில் வந்து அடக்குவான். அருள் வெல்லும் ஆணவம் தோற்கும்.

இந்தச் சிவராத்திரி நன்னாள் அதனை ஞாபகப்படுத்தி நிற்பதாக.

இலங்கை, இந்தியா

# இரு நாடுகளின் தூதுவர்களும் கொழும்பு விரைவு!

கொழும்பு, மார்ச் 8

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடக்கும் அறிக்கை, பதில், ஆட்சேபம் என்ற ராஜீகச் சச்சரவுகளின் உச்சக்கட்டமாக இரு நாட்டுத் தூதுவர்களும் இன்று கொழும்பு வருகிறார்கள்.

இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் திரு. பேர்னாட் திலகரத்தின, தமது அரசுடன் ஆலோசனை நடத்தும் பொருட்டு இன்று காலை கொழும்பு வருகிறார்.

அதே வேளை இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் தமது அரசாங்கத்தின் விசேட அறிவித்தல்களைக் கொண்டு, இன்று மாலை கொழும்பு வருகிறார்.

இந்திய வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி கடந்த வியாழன் இலங்கைத் தூதர் பேர்னாட் திலகரத்தினவை அழைத்து இலங்கை அரசின் ஆட்சேபக் குறிப்புக் குறித்து கடுமையாகக் கண்டனம் தெரிவித்து இருந்தார்.

அதைத் தொடர்ந்து இலங்கை அரசுடன் கலந்தாலோசிக்க திரு. திலகரத்தின இன்று கொழும்பு வருகிறார்.

அதே வேளை இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் இன்று கொழும்பு திரும்புகிறார். இந்திய அரசின் விசேட அறிவித்தல்களுடன் திரு. டிக்ஸிற் வருகிறார்.

கடந்த இரண்டு வாரங்களாக திரு. டிக்ஸிற், பிரதமர் ராஜீவ் உட்பட இந்திய வெளிநாட்டு அமைச்சின் முக்கிய அதிகாரிகளுடன் கலந்து ஆலோசனை நடத்திய பின்னர் கொழும்பு வருகிறார்.

இதற்கிடையில் இலங்கை அரசின் ஆட்சேபக் குறிப்புக்கான இந்தியாவின் பதில், இலங்கை அரசிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இந்தியாவின் பதிலை இலங்கை அரசு ஊன்றிப் படிக்கும் என்று இலங்கை அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை அறிக்கை:

## ஆதாரமற்ற, கெடுபிடியான குற்றச்சாட்டுக்களைக் கொண்டது

### திலகரத்னவிடம் ஆட்சேபம்

புதுடில்லி, மார்ச் 7

இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வு ஒன்றைக் காணத் தவறியதற்கு வேண்டாத காரணம் ஒன்றைக் காணும் முயற்சியாகவே இலங்கை அரசு, இந்திய வெளிநாட்டமைச்சர் பலிராம் பகத்தின் பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளது.

இப்படி இந்தியா கருதுவதாக வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி இலங்கைத் தூதர் பேர்னாட் திலகரத்தினவிடம் தெரிவித்தார்.

இந்திய வெளிநாட்டமைச்சு அலுவலகத்துக்கு திரு. பேர்னாட் திலகரத்தின வரவழைக்கப்பட்டு, இந்தியாவின் கருத்துத் தெரிவிக்கப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தேச வழமைச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும்

### நாடாளுமன்றத்தில் பிரேரணை

கொழும்பு, மார்ச் 8

தேசவழமைச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும். இவ்வாறு கோரும் பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்துக்கு நேற்று வந்தது.

பொல்காவலை எம். பி. திரு ரஞ்சன் ஜெயக்கொடி இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்து பேசினார்.

தேசவழமைச் சட்டம் இருப்பதால் யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்கள் காணி வாங்க முடியாத நிலைமை உண்டு என்றும், அந்த நிலையை நீக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

நீதி அமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்ன பதிலளித்துப் பேசுகையில் தேசவழமைச் சட்டத்தை ரத்துச் செய்யுமாறு விரைவில் மந்திரி சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

### ஷா ஆட்சி கவிழ்ந்தது

புதுடில்லி, மார்ச் 7

ஜம்மு - காஷ்மீரில் முதலமைச்சர் ஜி. எம். ஷா தலைமையிலான ஆட்சி இன்று வெள்ளிக்கிழமை மாலை கலைக்கப்பட்டது.

கவர்னரின் நிர்வாகத்தின் கீழ் ஜம்மு – காஷ்மீர் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஜி. எம். ஷா தலைமையிலான ஆளும் கட்சிக்கு இந்திரா காங்கிரஸ் வழங்கி வந்த ஆதரவை வாபஸ் பெற்றதே ஆட்சி கலைக்கப்பட்டதற்குக் காரணம்.

(ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்னர் எழுதப்பட்ட கட்டுரை ஒன்றை 8 ஆம் பக்கத்தில் காணலாம்.)

**சுபநேரம்**

**08 - 03 - 1986**

**சனிக்கிழமை**

சுபநேரம்:
3-25 முதல் 4-55 வரை ராகுகாலம்.
9 25 முதல் 10 55 வரை இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

மகா சிவராத்திரி
சனிப் பிரதோஷ விரதம்

## கடத்தப்பட்ட சடலம் ஆஸ்பத்திரிக்கு மீண்டும் வந்தது!

நல்லூர், மார்ச் 8

இயக்கம் ஒன்றின் பெயரைக் கூறி இறந்த ஒருவரின் சடலத்தைக் கடத்தியவர்களின் குட்டு அம்பலமாகியது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்று முன்தினம் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ஒருவர் நஞ்சருந்திய நிலையில் யாழ். வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மரணமானார்.

அவரது சடலத்தை ஆஸ்பத்திரி ஊழியர் பிரேத அறையில் வைப்பதற்காக எடுத்து வந்த பொழுது இனந்தெரியாத சிலர் வழிமறித்து இயக்கம் ஒன்றின் பெயரைக் கூறி விட்டு சடலத்தைக் கடத்திச் சென்றனர்.

உடனடியாக இது பற்றி குறிப்பிட்ட இயக்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட பொழுது அவர்கள் மின்னல் வேகத்தில் செயற்பட்டு சம்பந்தப்பட்டோரை உடனடியாகக் கண்டுபிடித்தனர்.

இதன் பின் நேற்று நண்பகல் 12·30 மணியளவில் இறந்தவரின் சடலம் மீண்டும் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டது.

### 'தென்னைமரம் வேணும்'



வனப்புள்ள தென்னந்தோப்பு அழகுக் காட்சி மட்டுமல்ல. நாட்டின் நற்பொருளாதாரத்துக்கும் உறுதுணை.

மரங்கள், பூச்சி புழுக்கள், வனஜீவ ராசிகள் ஆகிய யாவும் இயற்கையின் சம நிலையைப் பேணுவன.

ஆனால் எமது பகுதியில் அவற்றின் அருமை புரிந்தவர்கள் குறைவு. அதனால் தான் மரங்களைக் கண்டபடி வெட்டித் தறிக்கிறார்கள்.

அரசியல் சுதந்திரம் மட்டும் நமக்கு விடிவு தராது. பொருளாதார வளர்ச்சியும் சேர்ந்து மேம்பட வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் இருந்த தென்னந்தோப்பில் தென்னைகள் கண்டபடி வெட்டி வீழ்த்தப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

இந்த லட்சணத்தில் நாம் பொருளாதார வளர்ச்சி காண்பது எப்படி?

தமிழர்களை அரசாங்கப் படையினர் கொன்று குவிப்பதாக நொந்து கொள்ளும் நாம், வாய்பேசா, நடமாடா ஜீவன்களான மரங்களை வெட்டலாமா?

எல்லா நாடுகளிலும், பகுதிகளிலும் மரம் நடும் திட்டங்கள் அமுலாகின்றன. ஆனால் இங்கு......?

..........................................

காணி நிலத்திடையே – ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும்; அங்குக்
கேணி யருகினிலே – தென்னைமரம்
கீற்று மிளநீரும்
பத்துப் பன்னிரண்டு – தென்னைமரம்
பக்கத்திலே வேணும் –

..........................................

– மகாகவி பாரதியார் –

## யாழ். ஆஸ்பத்திரியில் மாலை 7 மணிக்கு மேல் நடமாடத் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்ப்பாணம் அரசினர் பொது வைத்தியசாலையில் மாலை ஏழு மணிக்குப் பின்னர் நோயாளர்களைத் தவிர்ந்த எவரும் தங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

வெள்ளிக்கிழமை தொடக்கம் இவ்விதி கடுமையாக அமுலாக்கப்படுகிறது.

யாழ் பெரியாஸ்பத்திரி மருத்துவ அத்தியட்சர் கலாநிதி எஸ். நச்சினார்க்கினியன் இதற்குரிய பணிப்புரைகளை வழங்கி உள்ளார்.

போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாக இதுவரை இவ்விதி தளர்த்தப்பட்டு இருந்தது. பார்வையாளர்கள் ஆஸ்பத்திரிக்கு நோயாளரைப் பார்வையிடும் நேரம் தவிர ஏனைய வேளைகளிலும் செல்ல அனுமதி வழங்கப்பட்டு இருந்தது.

பொதுமக்களின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### வீடுகள் தீக்கிரை

யாழ்ப்பாணம், மார்ச் 8

வவுனியா, பறையனாலங்குளத்தில் பல வீடுகள் தீக்கிரையாகின.

அப்பகுதியில் சிலர் கோரமாகச் சுட்டுக் கொலைசெய்யப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

அப்பகுதியில் தேடுதல் வேட்டைகள் நடைபெறுவதால் பல பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர் என்றும் வீடுகளில் இருந்த பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்றும் மேலும் அறிய வருகிறது.

இதனால் இப்பகுதியில் உள்ள 147 குடும்பங்களைச் சேர்ந்த 515 பேர் வவுனியா சின்னப்பண்டிவிரிச்சான் பாடசாலையில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

சுறுப்புச் சட்டைக்காரரே இவ்வாறு அட்டூழியங்கள் புரிந்ததாகச் சொல்லப்படுகிறது.

# மீண்டும் ஒரு போர் நிறுத்தம்

## அரசு தயார் என்று லலித் அறிவிப்பு

கொழும்பு, மார்ச். 8

தமிழ்ப் போராளிகளுடன் மீண்டும் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒன்றைச் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இருக்கிறது.

இவ்வாறு தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி தெரிவித்திருப்பதாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

இந்தியாவில் இருந்து ஆட்களையும், ஆயுதங்களையும் இலங்கைக்குள் கொண்டுவருவதை நிறுத்துவதாகத் தமிழ்ப் போராளிகள் ஒப்புக் கொண்டால், தாம் மீண்டும் யுத்த நிறுத்தத்துக்குத் தயார் என்று திரு லலித் தெரிவித்தாராம்.

தமிழ்ப் போராளிகள் தமிழ் நாட்டில் இருந்து படகுகளில் ஆட்களையும் ஆயுதங்களையும் கொண்டு வருவதைத் தடுக்க இந்தியாவினால் மட்டுமே முடியும் என்றும் திரு அத்துலத் சொன்னாராம்.

## புதிய ஆசிரியர் இணைப்பு அதிகாரியை சந்திக்கவிடாது தடை

### போராளிகள் திருப்பி அனுப்பினர்

யாழ்ப்பாணம், மார்ச் 8

கிளிநொச்சி மாவட்ட இணைப்பதிகாரி கூட்டிய மாநாடு ஒன்றில் கலந்து கொள்ள யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி சென்ற சுமார் 20 ஆசிரியர்கள் போராளிகளால் இடைவழியில் வைத்துத் தடுக்கப்பட்டனர்.

பளையில் வைத்து இவர்கள் சென்ற பஸ்ஸை வழிமறித்த போராளிகள், பின்னர் ஆழியவளைச் சந்தி வரை பஸ்ஸிலேயே சென்றனர்.

ஆழியவளைச் சந்தியில் வைத்து ஆசிரியர்களை பஸ்ஸில் இருந்து இறக்கினராம். யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸில் இவர்களை போராளிகள்

(8–ஆம் பக்கம் பார்க்க)

கூட்டணி யோசனையை ஏற்காவிட்டால்

## தமிழ் ஈழ ஆணையை நிறைவேற்ற போராட்டம்

### பி. பி. ஸிக்கு சிவா பேட்டி

லண்டன், மார்ச் 7

நியாயமான மாற்று யோசனை ஒன்றை தமிழர் விடுதலைக் கூட்டணி, இலங்கை அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

இதை இலங்கை அரசு ஏற்கவேண்டும்.

ஏற்காவிட்டால் 1977 இல் மக்கள் தந்த தமிழ் ஈழ ஆணையை நிறைவேற்றப் போராடுவோம்.

இப்படித் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் லண்டன் பி.பி.ஸி. தமிழோசைக்கு அளித்த பேட்டியில் சொன்னார்.

இலங்கையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண சிங்களக் கட்சிகளால் முடியாது. ஒரு கட்சி செய்வதை மற்றக் கட்சி எதிர்க்கும்

இதுதான் எப்பொழுதும் நடந்து வருகிறது. எமது உரிமைகளைப் போராடியே பெறவேண்டும்.

நாம் போராளிகளுக்குப் பக்கபலமாக இயங்குவோம்.

இலங்கை அரசு இன்னும் அதிகாரப் பரவலாக்கல் என்ற பெயரில் மாவட்ட சபை முறையைத்தான் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்றது.

தமிழருக்குச் சில குறைகள் இருப்பதாகத்தான் இலங்கை அரசு இன்னும் கூறிக்கொண்டு வருகிறது.

நாம் கூறுகிறோம்,

(8–ஆம் பக்கம் பார்க்க)

### வள்ளம் மூழ்கியது

காங்கேசன்துறைக்குச் சுமார் 5 மைல் தொலைவில் உள்ள கடற்பிரதேசத்தில் சென்றுகொண்டிருந்த 'டிங்கி' பிளாஸ்டிக் வள்ளம் ஒன்றின்மீது கடற்படையினர் சுட்டனர்.

அதனால் வள்ளம் சேதமடைந்து கடலில் மூழ்கியது. அந்த வள்ளத்தில் ஆறு போராளிகள் பயணம் செய்தனர். அவர்கள் கடலில் மூழ்கி இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

### சித்திரத்தேர் வெள்ளோட்டம்

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயிலின் புதிய சித்திரத் தேர், புதிய சப்பறம் ஆகியவற்

(8– ஆம் பக்கம் பார்க்க)

### மாவட்ட அமைச்சு சேதம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

வவுனியா மாவட்ட அமைச்சரின் அலுவலகத்தைக் கடந்த புதன்கிழமை இனம் தெரியாதவர்கள் சேதப்படுத்தினர்.

### காசோலை அபகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ் தொலைத்தொடர்புத் திணைக்களத்திலுள் நேற்று மாலை திடீரெனப் புகுந்த ஆயுதந்தாங்கிய கோஷ்டி ஒன்று அங்கிருந்த பல லட்ச ரூபா பெறுமதியான காசோலைகளை அபகரித்துச் சென்றது.

இதேபோன்ற சம்பவம் கடந்த புதன்கிழமையும் நடைபெற்றது தெரிந்ததே.

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை ஆலயத்தில் 2 வது அனர்த்தம்

## எது நடப்பினும் வந்து பக்தர்களைக் காக்க முன்வருவாள்

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நண்பகல் பூஜைவேளை.

அன்று பூஜைக்குப் பொறுப்பாக இருந்தவர் பிரம்மஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள்.

கிளிநொச்சியில் இருந்து வந்த பக்தர்கள் சிலருக்கு அவர் விபூதி, பிரசாதம் வழங்கிக் கொண்டு இருந்தார்.

அந்த நேரம்தான் 'சிவ பூஜைக்குள் கரடி புகுந்த மாதிரி' காரைநகர் கடற்படை முகாமில் இருந்து விரைந்து வந்துகொண்டு இருந்தது, இலங்கைக் கடற்படையின் பீரங்கிப் படகு ஒன்று. அதன் இலக்கம் 118.

அந்தப் பீரங்கிப்படகு நயினாதீவு இறங்குதுறையை நெருங்கிவிட்டது. படகில் இருந்து ஒருவர் இறங்குதுறை மேடைக்குப் பாய்ந்தார், படகை இறங்குதுறையுடன் அணைப்பதற்கு

அவ்வளவுதான். பயங்கர வெடிச்சத்தம் படகு பனை அளவு உயரத்துக்கு மேல் எழும்பியது. பின்னர் சிதறி கடலினுள் மூழ்கியது. பிரம்மஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் எட்டிப் பார்த்தார்.

**இவ்வாரச் சம்பவம்**

பயங்கரத்தைக் கண் முன்னால் கண்டார்.

இனித் தொடரப் போகும் பயங்கரச் சம்பவம் அவர் மனக்கண்ணில் தெரிந்தது. பதறிப் பதறிப் பூஜை புனஸ்காரங்களை முடித்துக் கொண்டார். ஆலயத்தை விட்டு வெளியே போனார்.

### சரித்திரப் பெருமை

63 சக்தி பீடங்களில் இலங்கையில் உள்ள ஒரே ஒரு சக்திபீடம் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயம்தான். சுயம்பு லிங்க மூர்த்தியை மூலஸ்தானமாகக் கொண்டுள்ளது.

நயினாதீவு முக்கால் மைல்தொடக்கம் ஒன்றே கால் மைல் வரைதான் அகலம் நீளமோ 3மைல்கள். மாங்கனி போன்ற அமைப்பு. 10,000 மக்கள்வரையில் வாழ்கின்றனர். சுமார் 3,000பேர் வாக்காளர்கள். வளமான வாழ்வு நடத்துவோர் பெரும்பாலோர்.

இதுதான் புகழ்பெற்ற நயினை. தீவுகளுக்குள் ஒரு தீவு அது

நெடுந்தீவு, அனலைதீவு, புங்குடுதீவு முதலியவற்றுக்கு இல்லாத தனித்தன்மை நயினைக்கு உண்டு.

புத்தபெருமானின் காலடி பட்ட தலம். தமிழ் பௌத்தர்களின் 'மணிமேகலை' ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றில் வர்ணிக்கப்பட்டது

மணிமேகலை தரிசித்த இடமும் நயினையே.

### 1958இல்

நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்கு 1958 இலும் சோதனை ஏற்பட்டது.

1958இல் இனக் கலவரத்தைத் தொடர்ந்து நயினை அம்பாள் ஆலயம் தாக்கப்பட்டது, பழைய தேர் உட்பட மூன்று தேர்கள், ஒரு மடம் அச்சமயம் எரிக்கப்பட்டன.

அச்சமயம் சட்டசபைச் சபாநாயகராக இருந்த சேர் வைத்திலிங்கம் துரைசாமி உயிருடன் இருந்தார். நயினை மக்கள் அவரிடம் முறையிட்டனர்.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அப்போதய பிரதமர் பண்டாரநாயக்காவிடம் முறையிட்டார்.

'கனக்கு எல்லாம் தெரியும். நான்தானே பிரதமர்'- என்று திரு. பண்டாரநாயக்கா அச்சமயம் மிடுக்காகப் பதிலளித்தாராம்

### மிகப் பழைய ஆலயம்

தற்போது அம்பாள் ஆலயத்தில் உள்ள பெரிய தேர் 1958 எரிப்பிலும் தப்பியது.

இப்பெரிய தேர் 1957 இல் இந்திய சிற்பாசாரியர்களினால் உருவாக்கப்பட்ட முதலாவது சித்திரத் தேர் ஆகும். அன்று சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவானது.

இந்தியாவின் பிரபல கட்டடக்கலை நிபுணர் திரு. சி. வி. நரசிம்மன் நயினைக்கு விஜயம் செய்து, ஆலயத்தின்பழமையைக் கண்டு வியந்தார்.

7,000 ஆண்டுகளுக்கு மேற்பட்டது இந்த ஆலயம் என்று அவர் சொன்னார்.

வட மாகாணத்தில் உள்ள மிகப் பழமை வாய்ந்த ஆலயம் என்ற பெருமை நயினை அம்பாள் ஆலயத்திற்குத் தான் உண்டு.

இப்புகழ் பெற்ற ஆலயத்துக்குக் கடந்த திங்கள் மீண்டும் பலத்த சோதனை ஏற்பட்டது.

ஆலயத்தின் பெரிய வோல், இரண்டு சிறிய

### தீபன் ராஜா

தேர்கள், மஞ்சம், 2 சகடைகள், சப்பறம் தீக்கிரையாக்கப்பட்டன.

1958 இல் தப்பிய பெரிய தேர் இம்முறையும் அம்பாள் அனுக்கிரகத்தினால் தப்பிவிட்டது.

50 ஆண்டுகளுக்கு முற்பட்ட மாரியர் மடமும் இம்முறை எரிக்கப்பட்டது.

பஞ்சசிலக் கொள்கையைப் பரப்பியவர் புத்தர் பெருமான்.

அவரின் பெயரால் அமைக்கப்பட்ட நாகவிகாரையைப் பாதுகாப்பதற்காகக் கொண்டு வரப்பட்டது கடற்படை முகாம்.

இன்று பஞ்சசிலங்கள் காப்பாற்றப்படவில்லை. பஞ்ச பூதங்களில் ஒன்றான நெருப்பை வைத்துத்தான் அவர்கள் பணியாற்றுகிறார்களா?

இதைத்தான் கடந்த திங்கள் சம்பவங்கள் உணர்த்துகின்றன.

புத்தபெருமான் பாதம்பட்ட இடம் அல்லவா? நயினாதீவு.

அம்பாள் புத்தபிக்கு மனதிலே புகுந்து காட்டுமிராண்டித்தனம் முழுமையாக கட்டவிழ்த்து விடப்படுவதைத் தடுத்து நிறுத்தி விட்டாள்.

பக்தர்களின் கண்ணீரைத் துடைக்க அன்னை வீறு கொண்டு புறப்பட்டு விட்டாள்.

பிக்குவின் ஆவேசம் அந்த நம்பிக்கையைத் தான் வெளிப்படுத்தியுள்ளது.

— இப்படி நயினை பக்தர்கள் கூறுகின்றனர்.

# ஓ, நுளம்பே! நீ எங்கே சங்கீதம் பயின்றாய்?

ஓ... நுளம்பே!

ஏன் என் கையைச் சுற்றிச் சுற்றி வருகின்றாய்? நான் பேனாவையும் தாளையும் எடுத்ததும் உனக்கு புரிந்து விட்டதா? நான் உன்னைப் பற்றித் தவறாக எழுதப் போகிறேன் என்று. அதனால் தானா எழுதவேண்டாம் என்று தடைவிதிக்கிறாய்?.

ஓ...... நுளம்பே!

நீ எந்த சங்கீத வித்துவானிடம் சங்கீதம் பயின்றாய்? இவ்வளவு ராகம் இசைத்துப்பாடுகின்றாயே அதற்கு நான் பரிசு தர நினைத்தேன். ஆனால் நீ என் உதிரத்தை அல்லவா பரிசாகக் கேட்கிறாய். யான் என்ன செய்வேன்?. ஆனால் நீயோ நான் நித்திரை செய்யும் வரை காத்திருந்து உன் பரிசை பெற்றுக்கொண்டு ஓடிவிட்டாயே.

ஓ...... நுளம்பே!

நீ எங்கு டாக்டர் படிப்பைக் கற்றாய்? ஊசியேற்றும் முறையை யார் உனக்குச் சொல்லித் தந்தார்கள்? மனிதர்கள் உனக்கு இரத்தவங்கிகள் என்ற எண்ணமா.?

ஓ...... நான் மறந்து விட்டேன். நீ டாக்டர் அல்லவா. நுளம்பே கன்னத்தில் நீ குந்துவதும் ஏனோ? கள்ளத்தனமாய் கின்னுவதும் ஏனோ?.

மலரில் தேனைக் குடிப்பது வண்டு. மனிதரின் தேனை [உதிரத்தை]க் குடிப்பது நீயா நுளம்பே. தேனைக்குடித்த போதை உன் தலைக்கேறியதால் தான் என்னவோ நீ ரீங்காரமிசைத்துக் கொண்டு உன்தலை சுற்றுவதால் எங்கள் தலைகளைச் சுற்றிச் சுற்றி வருகின்றாயா?.


ஓ..... நுளம்பே!

நீ இன்னும் என் பக்கத்தில் தானா இருக்கின்றாய்?நான் உன்னைப்பற்றி அதிகமாக எழுதவில்லை. நீ எழுதவிட்டால்தானே, ஆகவே கொஞ்சம்தான் எழுதினேன். சரி சரி இத்துடன் முடித்துக் கொள்கின்றேன். உனக்குக் கோபம் வந்தால், உன் இனத்தாருடன் என் மீது படையெடுத்துவிடுவாய். அதன் பின் என்பாடு திண்டாட்டம்தான். இப்போது உனக்குத் திருப்தி தானே.

செல்வி. சிவமலர் செல்லத்துரை,
புங்குடுதீவு.

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 7



அனுப்புபவர் பெயர்:- ..............................

விலாசம்:- ..............................

..............................

கையெழுத்து:- ..............................

**இடமிருந்து வலம்:**

1. தில்லை
6. பிரி
7. எப்போதும் சிறந்த............த்தையே தெரிவு செய்ய வேண்டும்.
8. இல்லாள் நல்லாள் ஆனால் சிறப்பது
9. இலங்கையில் பயின்ற இந்திய நடிகை.
11. மலை உச்சி.
13. எமது இனத்தின்மீது இப்போது நாட்டம் கொண்டிருப்பவன்.
14. ஒன்றை ஏழாய்ப் பிரிக்கும் வலுவுடையது.
16. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பரந்து காணப்படுவது.
18. இதுவும் ஒரு சரும வியாதி.
20. தமிழ் இளைஞர்களுக்கு இப்போது தேவையானது.
21. வைத்தியர்களுக்கு வேண்டியது.

**மேலிருந்து கீழ்:**

1. சிவனுக்கு உகந்தது.
2. இதை அறிந்து வேலை கொடுக்க வேண்டும்.
3. திவ்விய.
4. குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் தெரிந்திருப்பது.
5. நெருப்பு......
8. தமிழ் இளைஞர்கள் எல்லாம் இப்படி மாற வேண்டிய காலம் இது.
10. பட்டுப் புடைவையினால் பெயர் பெற்ற இடம்.
12. இரண்டு தரம் வந்தால் வாசனையின் அடைமொழியாகிறது.
15. தலையிருக்க ஆடுவது
17. பார்.
18. பல அல்ல.
19. கற்கால மனிதர் பாதுகாப்பாக வாழ தேர்ந்தெடுத்த இடம்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் 'சொற்சிலம்பம்' குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.
3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல. 7, சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
7. த ஷப்ரு-உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்கு பற்ற முடியாது.

✱ சொற்சிலம்பம் போட்டிகளில் பங்கு பற்றும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சில சமயங்களில் மூன்றுக்கும் அதிகமான வாசகர்களும் சரியான விடையை அனுப்புகிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சரியான விடை எழுதியோரிலிருந்து அதிர்ஷ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 5 வெற்றி பெற்றவர்கள் விவரம்:-

1 ஆம் பரிசு:- சோ. கிருஷ்ணதாசன், பிரதம லிகிதர் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை, சுன்னாகம்.

2 ஆம் பரிசு:- செல்வி. க. பிரியந்தி, மே/பா இ. கந்தவனம், 65, [illegible]

3 ஆம் பரிசு:- அருந்ததி தேவராசா "ஸ்ரீ [illegible] இணுவில்.

### சொற்சிலம்பம் இல. 5 விடைகள்

**இடமிருந்து வலம்:**

1. வத்திக்கான் 4. கோ
6. சிரிப்பு 8. அரிசி
10. பண்பாடு 12. யுகம்
14. திப்பிலி 15. தரை
16. காப்பு 17. மரபு
18. தக 19. பாடும்
20. கரம்

**மேலிருந்து கீழ்:**

1. வச்கிராயுதம்
2. திருப்பம் 3. காது
5. பரி 7. புண்
8. அடுப்பு 9. சிவலிங்கம்
11. பாதிப்பு [illegible] கரை
[illegible] 17. மடு
18. தர

# யாழ்ப்பாணத்திற்கும் ஒரு தீயணைப்புப் படை

## மாநகர ஆணையாளரின் பெருமுயற்சிக்குக் கிடைத்த வெற்றி

யாழ்ப்பாணத்தின் எரியும் பிரச்சினைகளில் சொத்துக்கள் எரிக்கப்படும் பிரச்சினையும் ஒன்றாகும்.

யாழ்ப்பாணத்தில் வீடுகள், வர்த்தக நிலையங்கள், ஆலயங்கள், பொது நூலகம் ஆகியவை காலத்துக்குக் காலம் எரிக்கப்பட்ட வேளையில், தீயணைக்கும்படை இல்லையே என்று ஏங்கிய நெஞ்சங்கள் எத்தனை?

மக்களின் ஏக்கத்தைக் கண்டு செயலில் இறங்கத் திடசங்கற்பங் கொண்டார் நமது மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே சிவஞானம்.

**இந்த வாரத்துப் பிரசை**

1984 ஆம் ஆண்டு முற்பகுதியில் தீயணைக்கும் படை நிதியத்தை ஆரம்பித்தார். இதுவரை ஏழு லட்சத்து பதினோராயிரம் ரூபா சேகரிக்கப்பட்டு உள்ளது. இத்தொகை வங்கியிலே வைப்புனபப் மாக உள்ளது. இதன் வட்டி மூலம் தீயணைப்புப் படையின் செலவுகளை ஈடுகொடுக்க முடியும் என்பது அவர் நம்பிக்கை.

இலங்கையில் உள்ள கனேடிய தூதரகத்துடன் தொடர்பு கொண்டு யாழ்ப்பாண மக்களின் பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார். இவர் சொன்ன காரணத்தால், இயந்திரங்களின் முழுச் செலவான பதினெட்டு லட்சத்து நாற்பதாயிரத்துஐநூறு ரூபாவையும் தூதரகம் பொறுப்பு ஏற்று உள்ளது. இலங்கையில் உள்ள கனேடியத் தூதுவர் திரு. டி. எம். கொலகட் இந்த விடயத்தில் முழு ஒத்துழைப்பையும் வழங்கி உள்ளார்.

'தீயணைப்புப் பிரிவுக்கான கட்டடம் மாநகர சபையினால் அமைக்கப்பட்டு உள்ளது. இப்பிரிவுக்கு ஓர் எழுதுவினைஞரும், தீயணைப்பு செயற்பாட்டில் பயிற்சி பெற்ற மூவரும் கொழும்பு மாநகர சபையில் இருந்து மாற்றலாகி வந்துள்ளனர்.

மாநகரசபையில் ஏற்கனவே சேவையில் உள்ள இருபது தொண்டர்களுக்குச் சென்ற மாதம் பத்தொன்பதாம் திகதி தொடக்கம் தீயணைப்புச் சம்பந்தமான பயிற்சி வழங்கப்படுகிறது. அவர்களும் இப்பிரிவில் தேவை ஏற்படும்போது உதவிபுரிவார்கள். எனவே



திரு.சி.வி.கே. சிவஞானம்

இந்த வகையில் யாழ்ப்பாண மாநகர சபைக்கு எவ்வித மேலதிக செலவினமும் ஏற்படாது'— என்று விளக்கினார் ஆணையாளர்.

யாழ்ப்பாண மாநகரப் சபை எல்லைக்குள்ளே மட்டுமல்லாமல், அப்பால் உள்ள சுற்றுப்புறங்களுக்கும் தீயணைப்புப் படையின் உதவிகள் கிடைக்க வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இம்மாதம் பன்னிரண்டாம் திகதி தொடக்கம் யாழ்ப்பாண மாநகர சபை தீயணைக்கும் படை செயற்பட உள்ளது. நல்லூரில் அமைந்துள்ள இப்படைப் பிரிவையும், பணிமனையையும் இலங்கையில் உள்ள கனேடிய தூதுவர் திரு. டி. எம். கொலகட் ஆரம்பித்து வைக்கப் போகிறார்.

இருபதாண்டு கால அரசாங்க சேவையில் பத்தாண்டு காலம் ஆணையாளராகப் பணியாற்றிய அனுபவம் திரு. சிவஞானத்துக்கு உண்டு. யாழ்ப்பாண மாநகர சபையின் நீண்ட கால வரலாற்றில் முதன் முதலாக அமைகிறது தீயணைக்கும் படை,

இதன் காரணமாக திரு சி. வி. கே. சிவஞானம் சஞ்சீவியின் இந்த வாரத்துப் பிரசை ஆகிறார்.

இந்தச் சாதனையைப் பற்றி ஆணையாளரிடம் எடுத்துச் சொன்னபோது, 'நமது குலதெய்வம் நல்லூர் கந்தனின் நல்லருள் இது' என்று அவர் மிகவும் அடக்கத்துடன் பதிலளித்தார்.

# இன்று சிவராத்திரி

இன்று வடபகுதியில் பல பாகங்களில் சிவராத்திரி பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

### நல்லூர்

நல்லூரில் உள்ள அகதிகள் புனர்வாழ்வு நிலையத்தில் சமூக அபிவிருத்திச் சபையின் ஆதரவில் சிவராத்திரி விழா நடைபெறுகிறது.

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் உட்பட பலர் உரையாற்றுவார்கள்.

நல்லூர் பகவான் சத்ய சாயி இல்லத்தில் நான்கு சாமங்களும் அபிஷேகம், பஜனை, திருமுறை ஓதல், நகர சங்கீர்த்தனம், மகா மங்கள ஆராத்தி ஆகியவை இடம்பெறும்.

✱ ✱

### சாவகச்சேரி

சாவகச்சேரி துர்க்கை அம்மன் ஆலயத்தில் நான்கு சாமமும் விசேட பூசை அபிஷேகம், தீர்த்தோற்சவம், திருவிழா ஆகியன இடம் பெறும்.

✱ ✱

### மீசாலை

மீசாலை வடக்கு இராமோவில் கந்தசாமிகோயிலில் விசேட பூசை உபந்நியாசம், பக்திப்பாடல் இடம் பெறும்.

### திருநெல்வேலி

நான்கு சாமங்களில் விசேட அபிஷேக ஆராதனைகள், கலை நிகழ்ச்சிகள் யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெறும்.

யாழ். பல்கலைக் கழக இந்து மன்ற முதலாம் வருட மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆராதனையை பிரதம அர்ச்சகர் மு. கனகசபாபதி குருக்கள் நடத்துவார்.

✱ ✱

### திருக்கேதீஸ்வரம்

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நான்கு சாமப் பூசை, அபிஷேகம், லிங்கோற்பவபூசை, பாலாவி தீர்த்தக் காவடி ஆகியன இடம்பெறும்.

**இன்று நடப்பவை**

### ஆர்ப்பாட்ட பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 8

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி ஆதரவில் ஆர்ப்பாட்டப் பேரணி இன்று இடம் பெறுகிறது.

நல்லூர் கந்தசாமி ஆலய முன்றலில் இருந்து பேரணி ஆரம்பமாகும்.

### நாடகமும் கூத்தும்

ஊர்காவற்றுறை, மார்ச் 8

யாழ் கலாசாரக் குழுவினரின் தயாரிப்பான விடிவை நோக்கி என்னும் நாடகமும், மாதனை அண்ணாவியார் எஸ்.கணபதிப்பிள்ளையின் நெறிப்படுத்தலின் கீழ் நடத்தப்படும் காத்தவராயன் கூத்தும் இன்று திருநெல்வேலி காளிகோயிலடி முன்றலில் மேடையேறுகின்றன.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் இருவகையான நாடக வடிவங்கள் ஒரே மேடையில் இடம் பெறுவது ஒரு சிறப்பம்சம் என கருதப்படுகின்றது.


**A/L 86**

**நீர்நிலையியல்**

ஆரம்பம்: 10-3-86


சனி, ஞாயிறு தவிர்ந்த நாட்களில்

காலை 7.30இல் இருந்து 8.45 வரை

ஆசிரியர்: ரவிமோகன்

யாழ்ப்பாணம்-


## 3ம் மாத நினைவுக் கண்ணீர்



**செல்வன் பரராஜசிங்கம் விஜயரஞ்சன் (குட்டி)**

அன்னையின் மடியில் 8-10-1964 — ஆண்டவன் அடியில் 12-12-1985

1. வீரம் நிறைந்த விறல் மகனே
விண்ணுடாளப் போயினையோ
பாரினில் எமக்கு யார் துணையோ
பதறிக் கதறித் துடிக்கின்றோம்.
2. ஏமத்தில் சாமத்தில் எம்குட்டி
எங்களைக் காணும் அவாவோடு
ஓடியே வருவாய் எம் குட்டி
ஏனோ இப்போ வர மறந்தாய்.
3. இரவினிற் துயிலும் போதினிலே
இசைத்திடும் கதவின் ஒலிகேட்டே
துடி துடித் தெழுந்து பார்த்திடுவோம்
துன்பக்கடலில் மூழ்கிடுவோம்.
4. மாதம் மூன்று போனாலும்
மாறாத் துயரில் மாழ்கின்றோம்
மானம் ஒன்றே பெரிதென்று
மண்ணைக் காக்க நின்றாயே.

உன்னை இழந்து கண்ணீர் சிந்தும்
அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, மைத்துனன், மருகி, உறவினர், தோழர்கள்.

இருபாலை வீதி,
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிவானந்தப் பேறுதரும் சிவராத்திரி விரதம்

## உறக்கம் துறந்து இறைபதம் நாட உறுபயன் தானே விளையும்

**சுவாமி சச்சிதானந்த யோகிராஜ்**

'உலகம் யாவையும்
தாமுள வாக்காலும்
நிலை பெறுத்தலும்
நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டு
டையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே
சரணங்களே'

சைவப் பெரு மக்கள் அனுஷ்டிக்கும் பல விரதங்களுள் மிகச் சிறந்தது மகா சிவராத்திரி விரத தினமாகும். இப் புனித திருநாளை அறிந்து அனுஷ்டித்தும் அறியாமலே அனுஷ்டித்தும் சிவானந்தப் பேறுபெற்ற அடியார்கள் பலரைப் புராணங்கள் மூலமாக அறிந்துள்ளோம். வைஷ்ணவ ஆழ்வார்களுக்கு வைகுண்ட ஏகாதசி எவ்வளவு முக்கியமானதோ, அத்தனை முக்கியமானது சைவ மக்களுக்குச் சிவராத்திரி.

அன்னை பராசக்தி சிவபெருமானுக்கு அர்ச்சனை புரிந்த புனித இரவே சிவராத்திரியாகும். ஒரு கற்ப காலத்தில் பிரமாவின் சிருஷ்டித் தொழில் முடிவுற்றது. பிரளய வெள்ளத்தில் உலகங்களெல்லாம் அமிழ்ந்தன; சர்வான்மாக்களின் சரீரங்களும் அழிந்தன; எங்கும் இருள் நிறைந்தது. இந்த இரவில், உமாதேவியார் திருவுள்ளத்தில் அன்பு கொண்டு வேதாகமங்களின் விதி தவறாது சிவபெருமானை அர்ச்சித்தார். நான்கு சாமங்களும் போய்க் கழிந்து (யுகமுடிவினிரவு கழிந்த பின்பு) சிவபெருமான் உபய பாதங்களை நமஸ்கரித்து 'தேவரீரை இன்று யான் வழிபட்ட இரவை விண்ணவரும், மண்ணவரும் சிவராத்திரி என்று கூறுதல் வேண்டும். இன்றிரவில் வழிபட்டோருக்கு இறவா முத்தி அளித்தலும் வேண்டும்' என்று வேண்டினர். எம்பெருமான் அவ்விரு வரங்களையும் உமாதேவிக்கீந்தருளினர்.

சாகரபுரத்தில் அங்குலன் என்றொரு வேடன் இருந்தான். அவன் ஒரு நாள் பகல் முழுவதும் காட்டில் அலைந்தும் வேட்டை கிடைக்கவில்லை. பசியும் வாட்டியது. பொழுது கழிந்து மாலை நேரம் வந்து கொண்டிருந்தது. வெறுங்கையோடு மனைவி மக்களிடம் செல்ல அவனுக்கு மனம் எழவில்லை. மாலை நேரம் குளக்கரைக்குச் சென்றால் மான், மரை ஏதாவது மிருகங்கள் தண்ணீர் குடிக்க வரும். அவற்றை வேட்டையாடலாம் என்ற எண்ணம் வந்தது. உடனே குளமொன்றைத் தேடிச் சென்றான். அங்கு கொடிய சிங்கங்களும், புலிகளும், மதங்கொண்ட யானைகளும் வரக்கூடும் என்ற அச்சத்தால் அங்கிருந்த மரமொன்றில் ஏறியிருந்தான். தனித்துத் தொழிலின்றி இருப்பின் நித்திரை வருமே என்று எண்ணிப் பொழுது போக்காக மரத்தின் இலைகளைப் பறித்துப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டே இருந்தான். வேடன் இருந்த மரம் வில்வமரம். அதன் கீழ் எம்பெருமான் சிவலிங்கத் திருமேனி தாங்கி எழுந்தருளி இருந்தார். வேடனோ எம்பெருமான் எழுந்தருளி இருந்ததை அறியான்; தான் பறித்துப் போட்ட பத்திரம் வில்வம் என்பதையும் அறியான். அன்று சிவராத்திரி என்பதையும் அறியான். எனினும், அவன் பகலெல்லாம் பட்டினி இருந்து, இரவெல்லாம் நித்திரை விழித்து எம்பெருமானுக்கு வில்வம் இட்டதால் சிவபதம் அடைந்தான்.

அறியாமற் சிவராத்திரி தினத்தை அனுட்டித்த கொலைத் தொழில் புரியும் வேடனுக்கே சிவபதம் கிடைத்தது. எனின், அறிந்து அனுஷ்டிப்போர் அடையும் பயன் எம்மாற் சொல்ல தகுமோ!

எது எப்படியாயினும் ஒன்று மட்டும் நிச்சயம். தன்னிச்சைப்படி உறக்கத்தையும், உணவையும், நீக்கி வைப்பவனுக்கு நல்ல மனவுறுதி உண்டல்லவா அவ்வுறுதியும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# இந்த வருடம் இலங்கைக்கு எப்படி இருக்கும்?

## டேவிட் செல்போர்னின் அரசியல் ஆரூட நோக்கு

இலங்கையின் அரசியல், பொருளாதார, கலாசார, ரீதியில் படிப்படியாக வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளது

அதே நேரத்தில் 1977 இல் இருந்து பதவி வகிக்கும் அரசாங்கம் 1986 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 580 கோடி ரூபாவை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கியுள்ளது

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 3,000 கோடி ரூபா துண்டுவிழும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்துண்டு விழும் தொகையைச் சரிக்கட்ட முடியாது என்று நிதி அமைச்சரே கூறி விட்டார்.

இச் செலவீனம் பயன் அளிக்கப்போவது இல்லை.

கடந்த 12 மாதங்களில் இப்போது தான் திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் மோதல்கள் இடம் பெறுகின்றன.

அம்பாறைகூட தமிழ்ப் போராளிகளின் தாக்குதல்களுக்குள் வந்து விட்டது

எம் 19 ரைபிள்கள், ஹெலிக்கொப்டர் துப்பாக்கிக் கப்பல்கள், இராணுவ மயப்படுத்தல், சிங்களக் குடியிருப்பாளர்களுக்கு ஆயுதம் வழங்கப்பட்டமை, பயங்கரமான முறையில் இடம் பெற்ற மனித உரிமைகள் மீறல்- இவை அனைத்தும் இடம் பெற்றும் அரசு சாதித்தது ஒன்றுமே இல்லை.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில், இழந்து போன தனது அதிகாரங்களைக் கொழும்பினால் மீட்டு எடுக்கவும் முடியவில்லை.

சிங்கள ஆதிக்கத்திடம் இருந்து தமிழர்களைக் காப்பாற்றத் தேவையானது சுய நிர்ணய உரிமை.

அதற்காகப் போராடும் தமிழ்ப் போராளிகளின் உத்வேகத்தை கொழும்பு அரசால் நசுக்கவும் முடியவில்லை.

அதற்குப் பதில் மிருகத்தனம், மிருகத்தனத்தை வளர்த்து விட்டது. இனங்களுக்கு இடையேயான மோதல் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர் சிங்களவரைப் பலி வாங்கி விட்டது.

சிங்களத் தலைவர்களின் பேச்சுக்களும் செயல்களும் அதிக பயத்தைத்தான் ஏற்படுத்துகின்றன.

ஒரு நாள் 'பாதுகாப்பு நிலைமை அபிவிருத்தி அடைந்து வருகிறது'- என்று அறிவிக்கப்படுகிறது.

மறுநாள் இன்னொரு கூட்டத்தில் 'இலங்கையைக் காப்பாற்ற முழு அளவில் யுத்தம் ஒன்றை நடத்த வேண்டும்' - என்று பிரகடனப்படுத்தப்படுகிறது.

இன்னொரு இடத்தில் 'தீர்வுக்குச் சரியான பாதை அஹிம்சை வழியே'- என்று போதனை செய்யப்படுகின்றது.

வேறொரு கூட்டத்தில் ஒரு கையில் ஒலிவ் இலையையும் மறுகையில் சப் மெஷின் துப்பாக்கியையும் வைத்துள்ள பொக்கட் நெப்போலியன்கள் கூறுகின்றனர். 'பௌத்தர்களே! இராணுவத் தீர்வு ஒன்றைக் காணத் தயாராகுங்கள்'- என்று.

கடந்த ஆகஸ்டில் ஜெயவர்த்தனா சொன்னார்: 'தீம்புப் பேச்சுக்கள் நிச்சயம் வெல்லும்'- என்று.

அதே நேரத்தில் கூடுதல் சலுகைகளை தமிழருக்கு வழங்க அவர் மறுத்து வருகிறார்.

தமிழர் பிரச்சினைக்கு 'இறுதித் தீர்வு' காணுவதாகக் கூறிக் கொண்டு வங்குரோத்தான நாட்டை மேலும் வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வரும் முயற்சியில் இலங்கை அரசாங்கத்தினர் ஈடுபடுகின்றனர்.

இந்த நிலையில் யுத்த நிறுத்தம், அர்த்தமுள்ள அரசியல் பேச்சுக்கள் இடம் பெற முடியாது.

1986 ஆம் ஆண்டில் காட்டுமிராண்டித்தனம் அதிகரிக்குமே தவிர வேறு முன்னேற்றத்தைக் காண முடியாது.

மலையகப் பகுதிகளிலும் மோதல்கள் இடம் பெறும் சூழ்நிலைதான் இருக்கிறது.

அரசியல், பொருளாதார ரீதியில் சுரண்டப்பட்ட சமூகம் தான் இலங்கையில் உள்ளது.

தோற்கடிக்கப்பட முடியாத ஒரு எதிரிக்கு எதிராக புனித பௌத்த யுத்தம் நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

யார் அந்த எதிரி? சர்வதேச பயங்கரவாதமா அந்த எதிரி?

தமிழ்த் தேசியவாதம் அல்லது இந்து மத வெறியின் கறுப்பு நிழலா அந்த எதிரி?

இல்லவே இல்லை.

தீவில் உள்ள தமிழ் சிறுபான்மை மக்கள் தங்களின் உயிர் பாதுகாப்புக்கும் ஜனநாயக அரசியல் உரிமைகளுக்காகவும் வாதாடுகின்றார்கள்: போராடுகின்றார்கள். அதற்கு மேலோ கீழோ அவர்கள் போகவில்லை.

இக்கோரிக்கைகளைத் தோற்கடிப்பதற்காகத் தான் வங்குரோத்து நிலையில் உள்ள அரசு, யுத்தம் நடத்துகிறது.

இதற்காக 1986 இல் 1630 கோடி ரூபாவை செலவிட நிர்ப்பந்திக்கப்பட்டும் உள்ளது.

தமிழரின் கோரிக்கைகளை நீதி, நியாயத்துக்குட்பட்ட முறையில் ஏற்றுக் கொள்ளுவதை விடுத்து, தேடுதல், ஒழிப்பு என்ற பேரில் குடிமக்களைப் படுகொலை செய்வது கொழும்பு அரசியல் தலைமைப்பீடத்தின் கருமமாகி விட்டது.

தினமும் ஒரு கோடி 80 லட்சம் ரூபா பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்படுகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் இலங்கைக்கு அழிவு தான் ஏற்படும் என்று நிதி அமைச்சர் அறிவித்தும் நிலைமை மாறவில்லை.

'இலங்கையின் வருமானம் நடப்புச் செலவீனங்களைச் சமாளிக்கப் போதுமானதாக இல்லை. வெளிநாட்டு உதவிகள், கடன்களினால் தான் முதலீட்டுச் செலவீனங்களை சமாளிக்க வேண்டி உள்ளது.'-

இப்படி நிதி அமைச்சர் சொல்லி இருக்கிறார்.

அதே நேரத்தில் 'இன்னும் ஒரு ஆண்டில் தீவிரவாதம் அழிக்கப்பட்டு விடும்' என்ற உறுதிமொழியை மீண்டும் அரசுத்தலைவர் திரு. ஜெயவர்த்தன கூறிக்கொண்டு வருகிறார்.

தமிழர் பிரச்சினையை வைத்து ஜெயவர்த்தனவும் திருமதி பண்டாரநாயக்காவும் கட்சி அரசியல் நடத்துகின்றார்கள்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆதரவு தான் இலங்கை அரசை அரசியல் தீர்வுக்கு வராமல் ராணுவத்தீர்வில் நாட்டம் கொள்ள வைத்தது.

1985 இல் 'உங்கள் போராட்டத்தில் நாம் உங்களுடன்தான்' என்று திரு ராஜீவ் காந்தி ஜெயவர்த்தனவுக்குக் கூறியதை புதுடில்லி அரசில் இன்னும் கற்பனையான நம்பிக்கை வைத்துள்ள தமிழர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

'இன்னொரு ஆண்டில் தீர்க்கப்படும்' — என்ற ஜெயவர்த்தனவின் உறுதிமொழி உபயோகமற்றது. சிங்கள மக்களுக்கே அது தெரியும். திரு லலித் அத்துலத்முதலி கூறுகின்ற 'எதிரிகள் மீதான வெற்றி' முன்னர் இருந்ததிலும் பார்க்க வெகு தொலைவில் உள்ளது.

அரசியல், இராணுவ குளறுபடிகள் நிலைமையை மோசமாக்குவதே இதற்குக்காரணம்.

இலங்கை மக்கள் 1985 இல் அனுபவித்ததிலும் பார்க்க கூடுதல் துன்பம், இடர்ப்பாடுகளை 1986இல் அனுபவிக்க வேண்டிய நிலையைத் தான் கொழும்பு அரசு ஏற்படுத்தி உள்ளது.

> திரு. டேவிட் செல்போர்ன், இலங்கைத் தமிழர் மத்தியில் பழக்கமான பெயர்.
>
> ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர், ஒக்ஸ்போர்ட் ரஸ்கின் கல்லூரியில் அரசியல் பேராசிரியராக உள்ளார்.
>
> இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து உலகில் தமிழருக்காகக் குரல் எழுப்பி வருபவர்.
>
> இலங்கைத் தமிழர் நிலை 1986 இல் எப்படி இருக்கும்? என்ற தலைப்பில் திரு. டேவிட் செல்போர்ன் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

# தாதிகளுக்கு நல்லதமிழ் நலம்பேணல் நல்லியர்

## சொல்லிப் போந்தவர் பேராசிரியர் சின்னத்தம்பி

**- சுந்தரனார் -**

'தமிழர்கள் பிறநாடுகள் சென்று செல்வம் தேடலாம். தொழிற் துறையறிவைப் பெறலாம்.

ஆனல் அவர்கள் செல்வம், அறிவு, நிபுணத்துவ சேவை தமது தாய்நாட்டுக்குக் கிடைக்க வேண்டும். தமது மக்களுக்குக் கிடைக்க வேண்டும். சொந்த மண்ணுக்குப் பயன்பட வேண்டும்'.

இவ்வாறு கருத்து வெளியிட்டு அவ்வாறு வாழ்ந்தும் காட்டிய பெருமகனார் பேராசிரியர் சின்னத்தம்பி.

மானிப்பாய் பொது நூலகத்துக்கு பேராசிரியர் சின்னத்தம்பி ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் நூல்களை அன்பளிப்பாக வழங்கினார். அவற்றை அவரிடம் பெற்ற உதவி நூலகர் திரு. எம். இரவீந்திரனிடம் பேராசிரியர் மேற்கண்டவாறு விளக்கினார்.

பேராசிரியர் அ. சின்னத்தம்பி மகப்பேற்று பெண்ணோயியற் துறை

தேன்கூடு

யில் நிபுணராக விளங்கியவர். இலங்கை மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராக இருந்தவர். பேராதனை பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் முதல் பேராசிரியராக விளங்கியவர்.

கர்ப்பப் பையில் ஏற்படும் புற்றுநோயைச் சத்திர சிகிச்சை மூலம் அகற்றும் முறையை முதன்முதல் இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர் பேராசிரியர் சின்னத்தம்பியே ஆவார்.

மருத்துவக் கருத்துக்கள் ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு மட்டும் பயன்படும் நிலைமாற வேண்டும் சாதாரண மக்களும், ஆயுள்வேத, சித்த வைத்தியர்களும், நாட்டுவைத்தியர்களும் இக் கருத்துக்களை அறிய வேண்டும். இப்போது இவை மந்திர வித்தை போன்ற மறை பொருளாக இருக்கின்றன என்று கவலைப்பட்டவர். இதனால் மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்தவர்.

பிரயோக உடற்றொழிலியல், அயன மண்டல மருத்துவம், மூப்புற்றோர் பெண்ணோயியல், மகட்பேற்று மருத்துவம், நலம்பேணல் விஞ்ஞானம் என்று பல நூல்களைத் தமிழில் ஆக்கியும், மொழிபெயர்த்தும் தந்துள்ளார்.

தாதிமார் பயிற்சியைத் தமிழில் பயில்வோருக்கு 'நலம்பேணல் விஞ்ஞானம்' என்ற நூல் ஒரு கையேடு போல உதவுகிறது.

தாதித்துறையில் ஈடுபடும் மகளிரை, நலம் பேணல் அம்மாமார், அக்காமார், நல்லாள்கள், நல்லியர், செவிலிகள் என்று நல்ல தமிழில் பேராசிரியர் அழைக்கிறார்.

மருத்துவ நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்த அவர், தமது மொழிநடையைப் பற்றித் தானே ஓரிடத்தில் கூறியுள்ளார். அது வருமாறு: 'கலைச் சொற்கள் கடுமையாக இருக்கும் நடையோ பேச்சுநடை. வசனப் போக்கோ ஒருகால் உரைநடை போலிருக்கும் மறுகால் வெறும் கதைபோல் இருக்கும். இது காலத்தின் தேவை' என்பார்.

சிலாபப் பகுதியில் நமது மக்கள் பெயரில் மட்டும் தமிழர்களாக வாழ்வதையும், தமிழ் மொழி தெரியாது சிங்களம் பேசுவதையும் கண்டு அப்பகுதியில் தமிழ் பாடசாலைகளை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொண்டவர்.

தமிழ் பல்கலைக்கழக இயக்கத்தில் துடிப்புடன் இயங்கி திருகோணமலையில் தமிழ்பல்கலைக்கழகம் அமைக்க முயன்றவர். கால்நூற்றாண்டுக்கு முன்னர் அவர் கனவு நனவாகி இருப்பின், திருகோணமலையின் வரலாற்றுப் போக்கு ஒருவேளை வேறு வகையாக அமைந்து இருக்கும்.

அன்னாரின் மறைவால், தமிழின்பால் காதல் கொண்டு தமிழன்னைக்குச் சேவை செய்த ஆளுமைமிக்க அதிஉன்னதமானுடனை நாம் இழந்து விட்டோம்.

# நலந்தரும் நாகரிக அரசு பலமுறக் கண்ட பழந்தமிழர்

## நட்புறவு பேணும் நல்லாட்சி புறநாநூறு கூறும் நிறைசாட்சி

**(இலக்கியக் காட்சிகள்)**

**★ திருச்செந்தூரன் ★**

மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன் என்பர். இது கூர்ப்பின் செயற்பாட்டை விளக்கும் கோட்பாடாகும். விலங்கோடு விலங்காக வாழ்ந்த மனிதன் படிப்படியாக மலர்ச்சியடைந்தான். தான் வாழும் சூழல் முழுவதையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயன்று வெற்றி பெற்றான். நாகரிக வளர்ச்சிப்படியில் மனிதன் அரசு என்ற நிறுவனத்தை உருவாக்கினான். குடும்பத்தைக் காக்கவும் செல்வமாகிய பசுக்களை -கோக்களை- க் காக்கவும் உருவான சிறிய அளவிலான அரச அமைப்புகள் படிப்படியாக வளர்ந்தன. மாடுகளையும் மக்களையும் காப்பதற்கான அரசு நாட்டையும் ஆதிக்கத்தையும்பெற்றுக் காப்பதற்கான அமைப்பாக மாறியது சிறு குழுக்களுக்கிடையே காலத்துக்குக்காலம் நிகழ்ந்த போர்களால் சிறிய அரசுகள் இணைந்தன. ஆற்றல் மிக்க பேரரசுகள் தோன்றின.

சமூகவியலாளர்கள் கூறும் இந்த வரலாற்றியற் காட்சிகள் அனைத்தையும் பழந்தமிழர் வரலாற்றுப் பதிவேடான புறநானூற்றில் காண்கிறோம். புறநானூற்றில் அரசின் தோற்ற நிலையிலுள்ள பல இனக் குழு அரசுகளைக் காண்கிறோம். இனக் குழுத்தலைவனிடம் இரவலன் ஒருவன் வருகின்றான். தலைவனிடம் கொடுப்பதற்குப்பொருள் இல்லை. அவன் உடனே கொல்லனிடம் சென்று வேல் ஒன்றைப் பெற்றுக் கொள்கிறான். அயலிலுள்ள இனக்குழு அரசு மீது 'படை' எடுத்துச் செல்கிறான்; வெல்கிறான்; கிடைத்த பொருளை இரவலனுக்குக் கொடுக்கின்றான். பறம்புமலைப் பாரியைப் பற்றிக் கபிலர் கூறும் போது அவன் முந்நூறு ஊர்களை ஆண்டதாகக் கூறுகிறார். இது அரசு ஓரளவு வளர்ச்சியடைந்த நிலையைக் காட்டுகிறது. அடுத்த நிலையில் தமிழகம் சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு முதலிய பேரரசுகளாக விரிவாக்கம் பெறுகின்றது. புறநானூற்றில் இவ்வளர்ச்சிப் படிகள் அனைத்தையும் ஒரு சேரக் காண்கிறோம்.

ஏனைய அரசுகளை அழித்துத் தனிப் பேரரசு ஒன்றை நோக்கிச் செல்வதே அரசுகளின் நோக்கமாக இருந்தது. தமிழகம் தனக்கு மட்டும் உரியதாகாமல் மற்றவர்களுக்கும் சொந்தமாக இருக்கிறதே என்று ஒரு பாண்டியன் கவலைப்பட்டான். போர்மேற் சென்றான்; திறை கொடுத்தோர் பிழைத்தனர். ஏனையோர் அழிந்தனர்.

"..................சினப்போர் வழுதி
தண்டமிழ் பொது எனப் பொறு அன் போர்
எதிர்ந்து
கொண்டி வேண்டுவன் ஆயின் கொள் கெனக்
கொடுத்த மன்னர் நடுக்கற் றனரே.
அளியாரோ அளியர் அவன் அளி இழந் தோரே."

எனப் புறநானூறு 51 ஆம் பாடல் வழுதியின் எதிரிகள் சிவந்த புற்றிலிருந்து வெளி வந்து ஒரு பகலில் அழியும் ஈயல் போல அழிந்த காட்சியை எடுத்துரைக்கிறது.

தாயகக் குழுக்கள் ஒன்றுடன் ஒன்று போரிட்டுப் பேரழிவு ஏற்பட்டது இதனைக் கண்டு தாயகக் குழுத் தலைவர்களிடம் பெரும் மனமாற்றம் ஏற்பட்டது ஏனைய அரசுகளை அங்கீகரிப்பதோடு அவற்றோடு நட்புறவைப் பேணுவதென்றும் தமிழக அரசுகள் முடிவு செய்தன. இதனால் தமிழகமண் தாயக மக்களின் செங்குருதியால் கறைப்படுவது தடைப்பட்டது.

தாயகக் குழுக்களிடையே நிகழ்ந்த போர்களைக் கண்டு வருந்தித் தலைவர்களை இடித்துரைத்து வந்த புலவர்கள் இதனால் மகிழ்ந்தவர். சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளி அம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கே நட்புடன் அமர்ந்திருந்தனர். அதனைக் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் கண்ணுற்றார். இக் காட்சி புலவருக்குப் பால் வெண்ணிறமும் பனைக் கொடியுமுடைய பலராமனும் நீல வண்ணமேனியும் ஆழிப்படையும் உடையோன் ஆகிய திருமாலும் அருகருகே நின்ற காட்சியை நினைவூட்டியது புலவர் அவர்கள் இருவரையும் பின்வருமாறு வாழ்த்தினார்:

"அஞ்சும் வலியுடைய இருவரும் இவ்வாறு இருப்பதைக் காண்பதிலும் இனிய காட்சி வேறு உண்டா? நீங்கள் ஒன்றுபட்டவராக விளங்கினால் கடல் சூழ்ந்த பயன் தரும் உலகம் முழுவதும் உமது காலடியில பணியும் என்பது உண்மை. எனவே, உமது புகழ் ஓங்குக நீங்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### எத்தாலும் நாங்கள் இளகிவிடோம் அம்மானே!

இத்தாலி வந்தென்ன, இயுரோலன்
வந்தென்ன
எத்தாலும் நாங்கள் இளகிவிடோம்
அம்மானே!
பொய்ச்சாட்டுச் சொல்லி அந்த
'மொச்சாட்டை'க் கொண்டடித்தார்!
துச்சம் உயிரென்றே துணிந்துவிட்டோம்
அம்மானே!
போராளிக்கு என்றுசொல்லிப் போடுகிற
குண்டெல்லாம்
ஊரார் வயிற்றில் விழுகிறதே அம்மானே!
ஆரியர்தான் என்றுபல ஆராய்ச்சி
செய்தனரே
பூரியர்தான் குண்டைப் பொழிகின்றார்
அம்மானே!
புத்தம் சரணங் கச்சாமி என்றுவிட்டேன்
வானில்
குத்துக் கரணம் அடிக்கின்றார் அம்மானே!
செத்தாலும் சாவோம்; இருக்கின்ற
செந்தமிழர்
[illegible]
அம்மானே!

-பா.சத்தியசீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி, இன பேதம் கடந்து நின்று களி தரும் கலாவடிவம் ஏழிசை

மொழி, இனம் என்ற வேறுபாடுகளைக் கடந்து நிற்பது சங்கீதக் கலை. ஒரு பாடலைப் பாடும் பொழுது தான் மொழியின் முக்கியத்துவம் தெரியக் கூடியதாயிருக்கிறது. பாடலில்லாது வெறும் இசைவடிவமான இராகத்தைப் பாடும் பொழுது, அல்லது பாடலை வாத்தியத்தில் இசைக்கும் பொழுது மொழி அங்கு இடம் பெறுவதில்லை.

தமிழிலோ அல்லது எமக்குத் தெரிந்த வேறொரு மொழியிலோ அமைந்த பாடலை அதிலுள்ள அர்த்தம் செவ்வனே விளங்குமாறு உச்சரித்துப் பாடும் பொழுது பாடலின் கருத்து எமக்கு ஏற்படுத்தும் தாக்கம் ஒரு பகுதியும், இசையின் தாக்கம் இன்னொரு பகுதியுமாக எமது கவனத்தை இரு விடயங்கள் ஈர்க்கின்றன.

மொழி எமக்கு விளங்காத இடத்தில் எமது கவனம் முழுவதும் சங்கீதத்திலே ஈர்க்கப்படுகிறது. இந்த உண்மையை அண்மையிற் தமிழ் நாட்டில் நடைபெற்ற தியாகராஜ உற்சவம் உணர்த்திற்று. தியாகராஜ உற்சவத்தில், தியாகராஜ சுவாமிகளாற் தெலுங்கிற் பாடப்பட்ட பாடல்களே இடம்பெறும். வாத்தியங்களிலும் அவை மாத்திரமே இசைக்கப்படும். தியாகராஜ சுவாமிகள் சங்கீதத்துக்காகவே வாழ்ந்தவர். அவர் தனது தெய்வீக அனுபவத்தையும், சங்கீதத்தையும் ஒன்றிணைத்து அமைத்த பாடல்கள் சங்கீதத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் முழுமையாக வெளிக்கொணரவல்லன.

சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் தமிழ்ப்

## தியாகராஜ உற்சவத்தின்போது பெருகிப் பாய்ந்த இசைவெள்ளம்

பாடல்களையே அதிகமாகப் பாடி வருபவர். அத்துடன் பாடல்களின் கருத்து நன்கு விளங்கும் வகையில் உச்சரித்தும், உரிய இடங்களில் அழுத்தம் கொடுத்தும் பாடுபவர். அவர் பாடும்




பொழுது சில நேரங்களில் பாடலின் கருத்திலே நாம் கூடிய கவனத்தைச் செலுத்தவும் சில நேரங்களில் இசையின்மேல் கவனத்தைச் செலுத்தவும் செய்கிறோம். இதுஎம்மையறியாமலே நடக்கும் நிகழ்ச்சியாகும்.

அண்மையில் நடைபெற்ற தியாகராஜ உற்சவத்தில்' கருணாஜலதே தாசரதே கமனீயாயன சுகுணலதே' என்ற தியாகராஜரின் பாடலை அவர் பாடவும் அதற்கேற்றாற்போல் எம்.எஸ். அனந்தராமன் அவர்கள் வயலின் வாசிக்கவும் அந்த சங்கீதானந்தமே தனியானதுதான். அதற்குக் காரணம் அங்கு பாடலின் கருத்து எமக்கு விளங்கவில்லை. இசையிலேயே நாம் மூழ்கிவிட்டோம்.

சிட்டிபாபு அவர்கள் தியாகராஜரின் பாடல்களை வீணையில் வாசித்தார். அங்கு சங்கீதம் மொழியாகவும், கருத்தாகவும், சுவையாகவும் மலர்ந்து நின்றது.

குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் வயலின் இசையைச் சிலர் விரும்புவதில்லை. ஜெட் விமானத்தின் வேகத்தில் வாசிப்பது இதற்கு ஓர் காரணமாகக் கூறப்படுகிறது. எது எப்படியிருப்பினும் 'மழைக்கால் இருட்டாயினும் மந்தி கொப்பிழக்கப்பாயாது'

**நவாலியூர் நா. சச்சிதானந்தன்**

என்றவாறு தியாகராஜரின் பாடல்களை ஸ்வர சுத்தமாகவும் லயசுத்தமாகவும் வாசித்து ஓர் தனி அனுபவத்தைத் தந்தார் குன்னக்குடி.

மனோதர்ம சங்கீதம் என்று வர்ணிக்கப்படும் எமது சங்கீதத்தின் தன்மையை மதுரைசோமசுந்தரம் அவர்கள் பாடும் போது அனுபவிக்கிறோம். கற்பனைஸ்வரத்தை ஸ்தாலமான லயத்துடன் பாடிக் கொண்டே அதனூடே ஸ்வரவடிவங்களை அகாரமாகச் சூக்கும லயத்துடன் பாடிவிடுவார். இந்த அனுபவத்தின் உச்ச நிலையைத் தியாகராஜ உற்சவத்தின் போது பெற்றோம்.

எவருக்குமில்லாதவாறு அவருடைய கச்சேரிக்குச் சிறந்த கலைஞர்கள் நால்வர் பின்னணியிசை வழங்கினர். குன்னக்குடி வைத்தியநாதன் அவர் பாடிய ஒவ்வொரு சங்கதியையும் வயலினில் 'பாடினார்' திருவாரூர் பக்தவத்சலத்தின் மிருதங்க ஓசையே தனிச் சங்கீதமல்லவா? ஹரித்துவாரமங்கலம் பழனிவேல் தவிலிலும், புதுக்கோட்டை மகாதேவன் மோர்ச்சிங்கிலும் அவரது பாட்டை லயரூபத்தில் இசைத்தனர்.

---

நகைச்சுவை நவீனம்

# வடக்கே போகும் ராமனுஜம்

★ திக்கவயல் ★

### அத்தியாயம் 1

பல நாட்களாகவே அந்த வாலிபனுக்கு ஓர் ஆசை. தமிழ்நாட்டிற்குச் சென்று வர வேண்டும் என்பதுதான்!

அந்த ஆசையை இலங்கேசன் பல நண்பர்களுக்குச் சொல்லி இருக்கின்றான்.

ஆயினும் நிதி நிலைமை காரணமாகத் தனது ஆசையை அவன் மனத்திரையில் அடக்கி வைத்து இருந்தான்.

அவனது தமிழக ஆசைகள் ஒன்றா இரண்டா?

கலைஞரைக் காண வேண்டும்; சிவாஜியைச் சந்திக்க வேண்டும். எம். ஜி. ஆரை ஒரு தடவையாவது பார்க்க வேண்டும்.

இப்படிப் பலப் பல.

'மட்ராஸ் நகர வீதியில் 'பார் மகளே பார்' படத்தில் சிவாஜி கணேசன் கட்டியிருக்கும் அகலக் கரைப் பட்டுவேட்டியுடன் நடை பயில வேண்டும்'.

தமிழகத்தின் திருக்கோயில்களான பழனி, சிதம்பரம், திருச்செந்தூர், மதுரை மீனாட்சி ஆதியாம் இடங்களுக்குச் சென்று வர வேண்டும். அது மாத்திரம் அன்றித் தமிழ் நாட்டைக் கடந்து ஒருமுறை திருவனந்தபுரம் செல்ல வேண்டும்.

இவைகள் யாவும் அவன் தனது ஆசை என்னும் அம்பறுத்தாணியில் கட்டி வைத்தவை. எதிர்பாராத விதமாக நண்பர் நல்லமுத்து ஆறுயிரம் ரூபாய் பணம் கொடுத்தார்.

அதுவும் வட்டிக்குத்தான்! இருப்பினும் பொறுப்பு எதுவும் இன்றி அவர் கொடுத்த பணம் இலங்கேசனுக்கு இனிப்பாக இனித்தது.

அந்தப் பணத்தில் 500 ரூபாய் கள்ள மார்க்கட்டில் பாஸ்போட்டிற்கும் விசாவிற்கும் செலவழிந்தது.

அவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டு தனது சொந்த ஊரான பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாண ரயில்வே நிலையத்துக்கு அதிகாலையில் சென்றான் அவன்!

பொழுது இன்னும் விடியவில்லை. தன்னைப் போல தனக்கு முன்பாக டிக்கட்டிற்கு இடம் பிடித்து நின்றவர்களைப் பார்த்தது அவனுக்குச் சிரிப்பாகவும் வேதனையாகவும் இருந்தது.

அனுமார் வாலாக நீண்டிருந்த அந்தக் கியூவில் அவனும் ஒருவன் ஆனான். பதினைந்து பேர் மட்டில் டிக்கட் பெற்று இருப்பார்கள்.

மேலதிகமாக டிக்கட் எதுவும் இல்லையென அதிகாரி மறுப்பதாகத் தகவல் வரவே எரிச்சல் அடைந்த கூட்டம் திரும்பிக் கொண்டிருந்தது.

'தங்களுக்கு வேண்டிய ஆட்களுக்கு 'ரிசர்வ்' பண்ணுவதற்கு டிக்கட்டை ஒழிக்கிறாங்கள்' கியூவில் நின்றவர் ஒருவர் தனது ஆத்திரத்தைக் கொட்டினார்.

'எல்லாமாக நாற்பத்தெட்டு டிக்கட்டுக்கள் யாழ்ப்பாணத்துக்கு இருக்கு. மற்ற டிக்கட்டை என்ன செய்தவங்கள். தட்டிக் கேட்க ஆள் இல்லாதபடியால் கஷ்டப்பட வேண்டிக் கிடக்கு' இது இன்னொருவரின் பிரலாபம்.

நாலு வாலிபர்கள் சலிப்பு அடைந்து ரயில்வே ஸ்டேசன் வாசற்படியில் குந்திக் கொண்டார்கள். அவர்களில் இலங்கேசனும் ஒருவன்.

அந்த அதிகாலைப் பொழுதில் சூரியன் உதித்துக் கொண்டிருந்தான்.

கடலுக்கு அப்பால் 25 மைலுக்குள் இருக்கும் இந்திய நாட்டைத் தரிசிக்க வேண்டும் என்றால் எத்தனை சிக்கல்கள்! அதிகாலை 4 மணிக்கே பருத்தித்துறையில் இருந்து இருபத்து ஐந்து மைல்கள் யாழ்ப்பாணம் வந்தும் பிரயோசனம் இல்லாது போய் விட்டது குறித்து இலங்கேசனுக்கு ஆத்திரமாக வந்தது.

படிக்கட்டில் இருந்த இன்னும் இரண்டு பேர் அங்கிருந்து வெளியேறி விட்டனர். மிகுதியாக இலங்கேசனும், இன்னொருவருமே படிக்கட்டுக்குப் பாரமாக இருந்தனர்.

அப்போது கறுத்த 'சூட்' போட்ட ஒரு போர்ட்டர் அருகில் வந்தார்.

'என்ன டிக்கட் கிடைக்கவில்லையா?' என்று கேட்ட போர்ட்டரை இனம் கண்டுபிடிப்பதற்கு இலங்கேசனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

இலங்கேசனும்போர்ட்டரும் கையாலும் முகத்தாலும் கதைத்துக் கொண்டார்கள்.

பக்கத்தில் இருந்த வாலிபரும் இலங்கேசனுடன் சேர்ந்து கொண்டார்.

பாஸ்போட்டும் காசும் கைமாறியது. பதினைந்து நிமிட நேரத்தில் போர்ட்டர் சிரித்துக் கொண்டு வந்தார்.

'காயா பழமா'? என்றான் இலங்கேஸ். பழுத்து விட்டது என்றார் போர்ட்டர். இருவரும் ஐம்பது யார் தூரத்துக்கு அப்பால் வந்து போர்ட்டரிடம் டிக்கட்டைப் பெற்றுக் கொண்டார்கள்.

இராமேஸ்வரம் வரை ரயில்வே டிக்கட் 150 ரூபாய் தான். ஆனால் முன்னூறு ரூபாய் செலவழித்து இருந்தான் இலங்கேஸ்.

மிகுதிக்குச் 'சந்தோஷம்' என்று பெயராம்!

போர்ட்டர் சென்று விட்டார். டிக்கட் கிடைத்ததில் திருப்தி. நூற்று ஐம்பது ரூபாய் நஷ்டமானதால் மனக் கஷ்டம். இலங்கேசன் ரயில்வே நிலையத்தை விட்டு வெளியேறினான்.

மூன்று சதத்திற்கு ஒரு பொருளைக் கூட்டி வித்தவன் மூவாயிரம் ரூபாய் குற்றப்படுகின்றான் மூவாயிரம் ரூபா லாபம் எடுத்தவன் முகாந்திரம் பட்டம் பெறுகின்றான்.' யாரோ கதைத்தது இப்போது அவனுக்கு ஞாபகம் வந்ததும் சிரித்துக் கொண்டான்.

அவன் நடந்து, நடந்து

(5 ஆம் பக்கம் பார்க்க)

---

### அத்தியாயம் - 6

# சிறகுப் பறவைகள்

து. வைத்திலிங்கம்

இரு மாத குறுநாவல்



இந்தக் கிராமத்தில் மிகச் சமீபத்தில் எத்தனையோ துறைகளில் எவ்வளவோ மாற்றங்கள்.

புதியவர்களின் முகங்கள் அங்குமிங்கும் காணப்பட்டன. என்னவென்று தெரியாத ஒரு பரபரப்பு.

கிராமத்து இளைஞர்களின் திடீர் மறைவுகள், பின்னர் மீண்டும் அவர்களது கிராமத்துப் பிரவேசம்;

இரவு இரவாகக் கூட்டங்கள்; கலந்துரையாடல்கள்; வயது வந்தவர்களின் இனம் தெரியாத மிரட்சி இளசுகளின் பயம் அற்ற உற்சாகம்----

அப்பப்பா!

இவ்வளவு உத்வேகமா?

தூங்கிக் கொண்டிருந்த கிராமங்களில் ஒரு புதிய விழிப்பு.

இவை ஒரு புறமிருக்க கிராமத்துச் சந்திகளிலெல்லாம் ஏட்டிக்குப் போட்டியாக ஊரையே அதிரவைக்கும் சப்த ஒலிகளுடன் அலங்காரமாக வீற்றிருக்கும் வீடியோக் கடைகள்.

முன்பின் சனங்கள் பார்த்திருக்காத கருவிகள்.

அவை எழுப்பும் இசை கலந்த அசுர ஒலிகள்; அங்கு அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் எண்ணற்ற வீடியோ ரேப்புகள். முகத்தை முகத்துடன் தேய்த்துக் கொண்டே தம்மை மறந்த நிலையில் சிரித்துக் கொண்டே காட்சி அளிக்கும் 'லேட்டஸ்ட்' சினிமா நடிக நடிகைகளின் பெரிய வர்ணப்படங்கள்.

அரை குறை ஆடைகளுடன், அவையும் கனக்குதே என்று ஏங்கி கண்களால் மோகக் கதை பேசும் சிலுக்குகளின் படங்கள்.

''வெட்டிவேரு வாசம், விடலைப் பிள்ளை நேசம்!''

'மானே தேனே கட்டிப் பிடி மச்சானை கழுத்திலே எட்டிப்பிடி!'

கொச்சையான பாட்டுக்கள்---!

பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் புத்தகங்களைக் கையில் வைத்துக் கொண்டு, திறந்த வாய் மூடாமல் இவைகளை பார்த்துக் கேட்டும் ரசிக்கும் காட்சிகள்!

'நீ புதுக்கொப்பி எடுத்தியா---

'நேற்றுஎடுத்தகொப்பி கொடுத்திட்டியா---

இவைதான் பரவலான உரையாடல்கள் இளைஞர்கள் கடைகளை மொய்த்தனர்.

பெரியவர்களின் கவனங்களையும் இவைகள் ஈர்க்கத் தவறவில்லை. இதற்கு நாங்கள் சளைத்தவர்களல்ல எனச் சவால் விட்டமாதிரி தெருவெங்கும் இயங்கும் மினித் தியேட்டர்கள்! வாசலில் தொங்கும் சினிமா அறிவித்தல்களும் அத்துடன் பிரத்தியேகமாக எழுதப் பட்டிருந்த கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற வாசகங்களும் கண்களைப் பறித்தன.

அன்றாட அரசியல் அனைவரது வாழ்விலும் புயலை ஏற்படுத்தியது.

அடுத்தடுத்து வந்த சவால்களை கிராமங்கள் தம் நெஞ்சினுள் விழுத்திக் கொண்டன.

சகலரும் காலத்துக்கு ஏற்றவாறு வாழப் பழகி விட்டனர். ஆங்காங்கு ஏற்பட்ட இளைஞர்களை சக்தி மிக்கவர்களாய் ஆக்கியது. படித்த படிப்புக்கு ஏற்ற பலன் கிடையாமல் போவது, நாட்டில் சாதி பணம் என்ற போர்வையால் மூடப்பட்டு நடைபெற்று வருகின்ற போலிநாடகங்கள், மோசடிகள் அவர்களை விழிக்க வைத்தன. அநீதிகளைக் கண்டு குமுறிய இளம் நெஞ்சங்கள் புரட்சி புரட்சி எனத் தாகம்எடுத்துத்திரிந்தன.

கனகசபையின் வீட்டிலும் அவரது மகன் சந்திரன் இதற்கு விதிவிலக்காக இருந்து விடவில்லை. அவன் வீட்டில் தினமும் புயலை ஏற்படுத்தினான்.

ஒருநாள்மாலை வீட்டை விட்டு வெளியே சென்றிருந்த சந்திரன் வீடு திரும்பவில்லை. புறப்பட முன் அவன் திலகத்தை தேடி வந்தான்.

'அக்கா இரா நான் வரச் செல்லும்! அம்மா கேட்டால் சொல்லு!'

டேய் சந்திரன்! என்னடா நீ நினைச்ச பாட்டுக்கு வேலைகளைச் செய்து கொண்டு போறாய்!நான் கொஞ்சக்காலமாய்ப் பார்த்துக் கொண்டு தான் வாறன்! உண்மையைச் சொல்! எங்கை போகப் போறாய்?'

திலகம் அதட்டினாள்.

இண்டைக்கு ஒரு முக்கிய கூட்டம்-- இதற்கு மேல் கேள்வி கேட்டுத் துளைக்காதை! நான் போறன்-...'

வெகு அலட்சியமாய்ப் பதில் வந்தது.

'நேற்றைக்கு அப்பா மங்களம் பாடியது தெரியும் தானே!

வேளைக்கு வா!'

திலகத்தின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் சந்திரன் வெளியேறினான் முதல் நாள் பெரிய பூகம்பமேவீட்டில் இடம் பெற்றது. முதல் நாள் இரவு பத்து மணியாகியும் சந்திரன் வீட்டுக்குத் திரும்பவில்லை.

'என்னப்பா கேற்றுப் பூட்டவில்லையே?'

கனகசபை படுக்கப் போகு முன்னர் பூரணத்தைப் பார்த்துக் கேட்டார்.

தினமும் இப்படிக்கேட்பார்.

அது பூரணத்துக்குப் பழக்கமான கேள்வி.

'ஒருக்கா போய் பூட்டுங்கோவன்! எல்லாத்துக்கும் அவளைத் தான் போட்டுச் சிப்பிலியாட்டுங்கோ!'

பூரணம் எரிந்து விழுவாள்.

ஆனால் மனுஷன் இருக்கையைவிட்டு அசைந்தால் போதாதே!

சரி விடுங்கோ! பத்து வீட்டுக்கு கேட்கத்தக்க தாய் ராவிலை கத்தாதேயுங்கோ! நான் பூட்டுவன் தானே!'

திலகம் தாயை அதட்டிவிட்டு போய் வெளிக் கேற்றை பூட்டிவிட்டு வருவாள்.

'ஏன் அவர் துரை, ஒருக்கா போய் பூட்டினால் குறைஞ்சு போமோ?

துரை என்பது கனக சபை தன் மகன் சந்திரனைப் பார்த்து அ[illegible] நக்கலுடன் கூறும் வார்த்தை.

'இனி அவனேடையும் துவங்குங்கோ! போய்ப் படுங்கோ' பூரணம் மறுபடியும் முணுமுணுப்பாள்.

'லைற்றுகளை நூருங்கோ! லைற்பில் காசுக்கு ஒரு பிள்ளைக்கு சீதனம் குடுக்கலாம்! வரிசையாய் எரிய விட்டிருக்கினம்.

புறுபுறுத்துக் கொண்டே தன் அறைக்குச் செல்வார்.

சந்திரன் வீட்டுக்கு வரும் போது இரவு பன்னிரண்டு மணியைத் தாண்டி விட்டது.

நடு நிசியான படியால் அவன் கேற்றைத் திறக்கும்படி ஒருவரையும் அழைக்கவில்லை கேற்றால் ஏறிக் குதித்து வீட்டுக்குள் வந்து மெதுவாக ஹோல் கதவைத் தட்டினான்.

'திலகமக்கா, திலகமக்கா'

குரல் சன்னமாக ஒலித்தாலும், திலகம் விழித்துக் கொண்டு வந்து கதவைத் திறந்தாள்.

'எங்கையடா சந்திரன் போனனீ?' திலகம் கோபமாய்க் கேட்டாள்.

'ஒரு கூட்டத்துக்குப் போனனான். நேரம் சென்று போச்சு!'

திலகத்தின் கோபத்தை பொருட்படுத்தாமல் சந்திரன் உள்ளே வந்தான். இதற்குள் பூரணமும் எழுந்து வந்து விட்டாள்.

'இஞ்சைவா சந்திரன்! [illegible] யடா ராராவாய் திரியிறாய்?'

'ஏன் இப்ப கத்திறியள்! நான் ஒரு கூட்டத்துக்குப் போனனான்.!'

'துரை வந்திட்டாரே?'

கனகசபை எழுந்து வந்தார். வீட்டுக்குள் வந்ததும் மாறி எல்லோரும் கேள்விமேல் கேள்விகளாய் சந்திரனை திக்குமுக்காட வைத்தனர்.

கனகசபையை முழித்துப்பார்த்தான்.

'என்னடா முழுசிறாய்? நாய் மாதிரி தெருத்தெருவாய் திரிஞ்சு போட்டு வாறாய் என்ன! எங்கை யடா போனனீ?'

'நாய் பேய் எண்ட சொல்லை விடுங்கோ! மரியாதையாய் கதையுங்கோ!'

'என்னடா சொன்னனீ--' ஓடி வந்து சந்திரனை நெற்றி மயிரில் எட்டிப் பிடித்தார். சந்திரன் இதை எதிர்பார்க்கவில்லை. இரண்டு கையாலும் பிடித்து அவரைத் தள்ளிவிட்டான்.

அவர் நிலைகுலைந்து சுவரில் போய் மோதி நின்றார்.

'நாயே! வீட்டை விட்டு இப்ப வெளிக்கிட வேணும்!' உச்சக் குரலில் கத்தினார்.

நீங்கள் என்ன கறுமத்துக்கு இப்ப எழும்பி வந்தனீங்கள்? தகப்பனும் மகனும் மல்லுக் கட்டுங்கோ! சந்திரன் போடா உள்ளுக்கை— சனியன்-- ராராவாய் திரிஞ்சு போட்டு வந்து மனுசற்ற [illegible] பூரணம் கத்தினாள்.

'சந்திரன் உள்ளுக்குப் போ!'

திலகம் அதட்ட, சந்திரன் சிலிர்த்துக்கொண்டு உள்ளுக்குச் சென்றான்.

'நீதானடி எல்லாத்துக்கும் காரணம்! உன்னுடைய செல்லத்தாலை தான் எல்லாம் நாசம் வந்தது!'

கனகசபை ஆத்திரத்துடன் பூரணத்தைப் பார்த்துக் கத்தினார்.

மனுசர் நித்திரை கொள்ள முடியாது போலை கிடக்கு! எல்லாரும் சேர்ந்து கத்தாதேயுங்கோ!

சரசு தன் அறையில் இருந்தே முணுமுணுத்தாள்.

அவளுக்குத் தன் சுகமான நித்திரை முறிந்து விட்டதே என்ற ஆத்திரம். இது முதல் நாள் நாடகம்.

பகல் பத்துமணிக்குத் தான் சந்திரன் வீட்டுக்கு வந்தான்.

திலகம் ஒன்றுமே பேசவில்லை. சந்திரனோடு பேசிப் பயனில்லை என்று அவள் உணர்ந்து கொண்டாளோ என்னவோ. ஏதோ ஒரு பொருளை பிரவுண் நிறக் கடுதாசியில் சுற்றிக் கொண்டு உடுப்புகள் வைத்திருந்த அலுமாரியில் புதைத்து வைத்தான்.

திலகம் மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

பூரணம் குளித்துவிட்டு வந்தவள், சந்திரன் சாப்பாட்டு மேசையில் இருந்து இடியப்பம் சாப்பிடுவதைக் கண்டாள்.

உடுப்பை மாற்றிக் கொண்டு வந்து முன் கதிரையில் அமர்ந்தாள்.

'சந்திரன் எங்கையடா இராப்படுத்தனீ? ஏன் வீட்டுக்கு வரவில்லை?'

சந்திரன் ஒன்றும் பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

'தயவு செய்து அம்மா, ஒன்றும் கேட்டுத் தொந்தரவு செய்யாதேயுங்கோ! உங்களுக்கு இப்ப ஒன்றும் விளங்காது! நான் ஒன்றும் வம்புத்தனமான வேலை செய்யவில்லை

நாங்கள் இப்பிடி நெடுகலும் இருக்க முடியாது. அதுதான்...... விடுதலை வேணும் எங்களுக்கு......

அவன் ஏதோ மெதுவாக முணுமுணுத்தான்.

'டேய் நீ என்னடா சொல்லுறாய்? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை! வடிவாய் சொல்லன்ரா!

பூரணம் அவசரப்பட்டாள்.

'நீங்கள் பேசாமல் போங்கோ அங்காலை! என்னைக் கரைச்சல் படுத்தாதேயுங்கோ'

சந்திரன் எரிந்து விழுந்தான்.

'என்னவாலும் செய்'

புறுபுறுத்துக் கொண்டே கதிரையை விட்டு எழுந்து சென்றாள்.

சந்திரன் மத்தியானம் வெளியே மறுபடி புறப்பட்டுச் சென்றான்.

திலகம் ஆறுதலாகச் சென்று சந்திரனின் பெட்டியைத் திறந்து பார்த்தாள்.

உடுப்புக்களின் அடியில் இருந்த பார்சலை குலைத்துப் பார்த்தாள்.

உள்ளே இருந்தது ஒரு சிறு கைத்துப்பாக்கி.

அவளுக்கு நெஞ்சு திடுக்கிட்டது.

மறுபடியும் அதை முன்பு இருந்த மாதிரியே கடுதாசியால் சுற்றி வைத்தாள். ஒரு சிறு டயரியும், பாரதி பாடல்கள் என்ற புத்தகமும் அங்கு இருந்தன.

பாரதி பாடல் புத்தகத்தில் ஆங்காங்கே சில பக்கங்களில் அடையாளம் காண்பதற்காக சிறு கடதாசிகள் செருகி வைக்கப்பட்டிருந்தன.

திலகம் புரட்டிப் பார்த்தாள்.

'பெல்ஜியம் நாட்டுக்கு வாழ்த்து'

'புதிய ருஷியா'

'கரும்புத் தோட்டத்திலே'

'சுதந்திரப் பள்ளு'

இப்படியான பாடல்கள் தொடங்கும் பக்கங்களே அவை. அதை மூடி வைத்து விட்டு, மெதுவாக டயரியைப் புரட்டினாள்.

வீட்டிலும் சிறை! நாட்டிலும் சிறை! வென்றிடுவோம் இதை!'

'அடிமைத் தளையை விரட்ட நான் என்னையே அர்ப்பணிக்கின்றேன்!'

இப்படியே தொடர்பில்லாத பல வசனங்கள். மேலும் பல இடத்து விலாசங்கள்.

திலகத்துக்கு ஓரளவு சந்திரனின் நடவடிக்கைகள் புரிய ஆரம்பித்தன.

கலக்கும் நெஞ்சுடன் அறையை விட்டு வெளியே வந்தாள்.

திலகம் படித்தவள். அவளுக்கு நாட்டு நடப்புகள் நன்கு புரியும்.

வீட்டுக்குத் தினமும் தத்தமது கருத்துகள், உள்ளோட்டங்கள் யாவற்றையும் சுமந்து வரும் பத்திரிகைகள், சவர்க்காரம், அப்பளம் என்று விற்பனைக்கு சிறுவர்கள் கொண்டு வருவார்கள். சில சமயங்களில் இளவயதுக்காரர்களும் வருவார்கள்.

திலகம் மறுபேச்சு இல்லாமல் அவற்றை பணம் கொடுத்து வேண்டி விடுவாள்.

இவற்றைத் தற்செயலாய் கனகசபை கண்டால் எரிந்து விழுவார்.

'தம்பி இஞ்சை இதுகளைக்கொண்டு வராதை! பேசாமல் கொண்டு போ!'

முகத்தில் அடித்தாற் போல் கூறுவார்.

'ஒரு இரண்டு காசுக்கு இப்பிடிக் கத்திறியள்! அதுகளும் எங்களுக்காகத்தானே பாடுபடுதுகள்! நாங்களும் உதவத்தானே வேணும்'

பூரணம் கூறுவாள்.

கிராமத்தில் பெண்கள் இப்படியான அலுவல்களுக்கு முன்னுக்கு நின்று தமது ஆதரவைத் தெரிவிக்கத் தவறவில்லை.

ஒரு நாள் இளைஞன் ஒருவன் வந்து சில உணவுப் பார்சல்கள் கட்டித் தரும்படி கேட்டான்.

பூரணம் மறு பேச்சுப் பேசவில்லை. திலகம் சுறுசுறுப்புடன் சமைத்து பார்சல்களைக் கட்டிக் கொடுத்தாள்.

( 5 ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை பெருநட்டம்

முன்னொரு காலத்தில் ஒரு வழிப்போக்கன் தன் தாயகத்தில் இருந்து அயல் நாடொன்றிற்கு பிரயாணம் செய்ய வேண்டி இருந்தது அவ்விரு நாடுகளுக்குமிடையில் ஒருபாலைவனம் இருந்தது அப்பாலைவனம் வழியாக அவன் பயணம் செய்வதற்கு ஒட்டகம் தேவைப்பட்டது. ஆகவே அவன் ஒரு ஒட்டகக்காரனிடம் சென்றான். அங்கு ஒட்டகக்காரனைச் சந்தித்து அவனிடம் ஒட்டகம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தினான்.

ஒட்டகக்காரனும் வாடகையை வாங்கி விட்டு இருவருமாக ஒட்டகத்தில் ஏறி பிரயாணம் செய்தனர். நடுப்பகல் ஆகிவிட்டதால் வழிப்போக்கனுக்கு பசியும் களைப்பும் ஏற்பட்டது. அத்துடன் நடுப் பாலைவனத்தின் வெயிலும் சேர்ந்து கொண்டு வாட்டியது அதனால் அவர்கள் ஒட்டகத்தை நிறுத்தி விட்டு இறங்கினார்கள். வழிப்போக்கன் ஒட்டகத்தின் நிழலிலேயே படுத்து விட்டான். உடனே ஒட்டகக்காரன் வழிப்போக்கனுடன் பேசலானான்.

'ஒட்டகக்காரன் :-வழிப்போக்கனே! நீ எனக்கு ஒட்டகத்தில் செல்வதற்கு மட்டுமே வாடகை தந்தாய். அதன் நிழலில் படுப்பதற்கு வாடகை தரவில்லையே ஆகவே நிழலில் படுப்பதற்கும் வாடகையைத் தந்து விட்டுப் படு' என்றான் அதற்கு வழிப்போக்கன் 'படுப்பதற்கும் பிரயாணம் செய்வதற்கும் சேர்த்துத்தான் முன்னமே வாடகை தந்து விட்டேனே! இப்போது வாடகை தரமுடியாது என்றான். அதற்கு ஒட்டகக்காரன் அப்படியென்றால் நான் எனது ஒட்டகத்தை எடுத்துச் சென்று விடுவேன்என்று கூறி இருவரும் சண்டையிட்டுக் கொண்டும் தர்க்கித்துக் கொண்டும் இருந்தார்கள். இதைக் கண்ட ஒட்டகம்மெல்லநழுவி நெடுந்தூரம் சென்று விட்டது. வாய்த் தர்க்கத்தை முடித்துக் கொண்ட இருவரும் ஒட்டகத்தைப் பார்த்தனர். அதைக் காணவில்லை. இருவரும் மிகுந்த கவலையும் வெட்கமும் அடைந்தனர். ஒட்டகம் தங்கள் இருவருக்கும் நல்ல பாடம் கற்பித்து விட்டதை எண்ணி தலைகுனிந்து தமது தாயகத்தை நோக்கி வேகும் வெயிலில் கால் நடையாக நடந்து சென்றனர்.

பேராசை பெரு நட்டம் என்பதை இக்கதை விளக்குகின்றது.

செல்வன்
சி. மலரவன்
8ம் வகுப்பு
கிளி] முருகானந்தா மகா வித்தியாலயம்.
முரசுமோட்டை, பரந்தன்

## பறக்கும் பட்டம்

பறக்குது பாரேன் பட்டம் பறக்குது பாரேன்
பரந்த வானில் பறவை போலப்
பறக்குது பாரேன்
சிறகில்லாமல் இறகில்லாமல் வெட்டவெளியிலே
சித்திரம்போற் பறக்குதுபார்சிந்தையள்ளுதே
பாம்புபோல வாலையாட்டிப் பறக்குது பாரேன்
பளபளவென மின்னுதுபார் பரிதி போலவே
எட்ட எட்டப் போகுதுபார் வெட்ட வெளியிலே
நூலைக் கிட்ட வந்து விட்டுக்கொடு
மேலெழும்புமே
வட்டநிலா வந்ததுபோல் பட்டம் பறக்குதே
பட்டுஇங்கே வாடி நீயும் தொட்டுப்பாரேண்டி
கயிறறுந்து போனால் அது கரணமடிக்குமே
காற்று வீசும் திசையில் அது கவிழ்ந்து வீழுமே
ஐயோ வேண்டாம் அம்பிப் பயல் அழப்போகிறான்
அதனை இறக்கி வந்து கையில் தாரும்
அருமை மாமாவே.

-"ஸ்ரீ"-

## வியக்க வைக்கும் பரப்பளவுகள்

**கண்டங்கள்**

| | |
|---|---|
| ஆசியா ......... | 17,035,000 சதுர மைல். |
| ஆபிரிக்கா......... | 11,635 000 சதுர மைல். |
| ஐரோப்பா......... | 3,850,000 சதுர மைல். |
| அவுஸ்திரேலியா......... | 2,974.000 சதுர மைல். |
| வட அமெரிக்கா ......... | 9,435,000 சதுர மைல். |
| தென் அமெரிக்கா. ......... | 6,860,000 சதுர மைல். |

**பிரதான வனாந்தரங்கள்**

| | |
|---|---|
| சகாராப் பாலைவனம்...... | 3,000,000 சதுர மைல். |
| அவுஸ்திரேலியப்பாலைவனம் | 600,000 சதுரமைல். |
| அரேபியாப் பாலைவனம் ... | 500,000 சதுர மைல். |
| கோபிப் பாலைவனம்... | 400,000 சதுர மைல். |

**பெரிய சமுத்திரங்கள்**

| | |
|---|---|
| பசுபிக் சமுத்திரம் ...... | 63,985,000 சதுர மைல். |
| அத்திலாந்திக்சமுத்திரம்... | 31,925,000 சதுர மைல். |
| இந்து சமுத்திரம் ...... | 28,557.000 சதுர மைல். |
| ஆட்டிக் சமுத்திரம் ...... | 5, 541,600 சதுர மைல். |

பொ. அன்ரன் ஜெறுட்
பளை மகாவித்தியாலயம்,
பளை.




## நீர்மூழ்கிப் படகு

நீர்மூழ்கிப் படகு முதலில் ரஷ்யராலேயே தயாரிக்கப்பட்டது. இது ஆங்கில மொழியிலே 'சப்மரீனர்' என அழைக்கப் படுகிறது. இதனுள் ஒரு அறை உள்ளது. ஓர் எந்திரத்தின் உதவியால் நீர் அவ்வறையுள் செலுத்தப் படும் அப்போது படகு நீருள் சென்று ஓடும். வேறொரு எந்திர உதவியால் நீர் வெளியேற படகு வெளியே வரும்.

இந் நீர்மூழ்கிக் கப்பல்கள் பல நாடுகளில் உளவு பார்க்கப் பயன்படுகின்றன. சில கப்பல்களுக்கு போக வழி காட்ட கடலுள் பாறைகளைப் பற்றி அறிவிக்க இதிலுள்ள கருவி உதவும். மேலும் கடலுள் கண்ணி வெடி புதைத்திருந்தால் அதை கண்டு பிடிக்கவும் இது உதவும். விஞ்ஞான உலகின் வளர்ச்சி எடுத்துக் காட்டுகளில் நீர்மூழ்கிப்படகும் ஒன்றாக விளங்குகிறது.

நி. தவபாலன்
யாழ் மத்திய கல்லூரி

# சமூகத்தில் பெண்களின் பங்கும் பயனுள்ள பங்களிப்புகளும்

★ திருமதி சரோஜினி கணேந்திரன் ★

குடும்பப் பெண் என்று எமது சமூகம் எதனை எதிர்பார்க்கிறது குடும்பச்சுமைகள் அத்தனையையும் தாங்கி தேவைப் படும் போதெல்லாம் இரவானாலும் பகலானாலும் தனது முழுநேர உடலுழைப்பைக் கொடுப்பதற்குத் தயார் நிலையில் பெண் இருக்க வேண்டும். மனைவியாக, தாயாக ஏன் பாட்டியாகிவிட்ட நிலையிலும் கூட இவ்வெதிர்பார்ப்புகள் குறைவதில்லை அவளுக்கு வயோதிபத்தினாலோ, சுகயீனத்தாலோ அல்லது மரணத்தினாலோ கைகால்கள் அசைக்கவே முடியாமற் போனவிடத்தும் பல குடும்பங்கள் அவள் தனியே தாங்கிய சுமையைப் பங்கு போட்டுச் செய்தும் அந்த இரு கைகளும் உடம்பும் மனப்பூர்வமாக இயல்பாகவே ஏற்றுக் கொண்டு தந்த உழைப்பை ஈடு செய்ய முடியாது திண்டாடுவதை நாம் அனுதினமும் அவதானிக்கிறோம். தாயில்லாவிடில் தகப்பன் சித்தப்பன் என்று பலரும் கூறுவதைக் கேட்கிறோம். அந்த ரீதியில் உப்பில்லாத போது தான் உப்பின் அருமை தெரியுமாப் போல் இல்லாத போது உருகும் ஒரு மனப்பான்மையை எமது சமூதாயம் வளர்த்துக் கொண்டிருக்கிறதேயொழிய இருக்கும் போது அதனைப் போற்றிப் பாதுகாப்பதில்லை. இந்த நிலைமை தான் இன்று அநேக குடும்பப் பெண்களுக்கு இருக்கிறது. ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் அரிதாகவே இல்லக்கிழத்திக்கு உதவி செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பெண்கள் தசாப்த முடிவில் கூட்டப்பட்ட நைரோபி மாநாட்டுத் தீர்மானம் எவ்வளவு தூரம் எமக்குப் பொருத்தமாக இருக்கிறது எனப் பார்க்கலாம். பெண்கள் வீட்டில் மேற்கொள்ளும் பணிகளுக்கு ஒரு வேதனம் போட்டுத் தர வேண்டும் என்பதும் அந்தத் தீர்மானங்களில் ஒன்று. இப்படியாகத் தீர்மானங்கள் நடைமுறைப் படுத்த முடியாதனவாக அமைந்த போதும் ஒரளவுக்கு இவற்றை ஆராய்ந்து (இரகசியமாகவேனும் கணக்குப் பார்த்து) குடும்பப்பெண்கள் படும் துன்பங்களைத் துடைக்க அவர்கள் செய்யும் தியாகங்களை மதிக்க ஏனையகுடும்ப அங்கத்தவர்கள் முயலுவார்களேயானால் அதுவேஅவளுக்குச் செய்யும் மாபெரும் உதவியாக ஆத்ம திருப்திக்கு வழிகோலுவதாக அமையும். ஒரு பெண்ணின் பொறுப்புக்களை மதித்து நடக்கவும் அவளுக்குத் தகுந்தவிடத்து கை கொடுத்து தவவும் முன்வர வேண்டும். தமது குடும்பக் காரியங்களில் சமயலறையில்கூட உதவ முன்வர வேண்டும்.

அடுத்ததாக உத்தியோகம் பார்க்கும் குடும்பப்பெண்கள்: இவர்கள் நேரத்துடனும் வேலையுடனும் செய்யும் போராட்டம் உக்கிரமானது. வீட்டுக்குதவியாள் பிடிப்பது குதிரைக் கொம்பாகி விட்ட இக் காலப்பகுதியில் குடும்பத்தில் பொறுப்பாக ஒரு அங்கத்தவர் இல்லாத போது பிள்ளைகளை வளர்ப்பதில் குடும்பத்தைப் பராமரிப்பதில் எவ்வித குறையும் இருக்கக் கூடாது என்ற நோக்கத்துடனும் அதே சமயம் தான் வகிக்கும் உத்தியோகத்தைத் திறம்பட ஆற்ற வேண்டும் என்ற துடிப்பும் ஒரு பெண்ணுக்கிருக்குமாயின் அவள் பாடு குருசேத்திரப்போர் தான். இந்த இடத்தில் தான் பெண் விடுதலை பற்றிய எமது அறிவைக் கூர்மையாக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஒரு ஆண் மாலையில் உழைத்து வீடு திரும்பும் போது அவருக்கு இருப்பதாகக் கூறப்படும் உத்தியோகப்பழு, வேலைக்கஷ்டம், பிரயாணக்களைப்பு நீங்க அவர் சாய்மனைக் கதிரையில் ஆற அமர அமர்ந்து மனைவி சுடச்சுடத் தரும் தேனீரைக் குடித்து ஓய்வெடுக்க வேண்டும் அந்த நேரத்தில் குடும்பப் பிரச்சினைகள் எத்தனை தான் இருந்தாலும் சிரித்த முகத்துடன் என்பதெல்லாம் நமது சமுதாயத்தின் எதிர்பார்ப்புகள். இவைகள் வீட்டுப் பெண்கள் கட்டாயமாகக் கடைப் பிடிக்க வேண்டும். குடும்பத்தின் கட்டுக்கோப்பு நெகிழ்ந்து விடாமல் இருப்பதற்கு இப்படியான நடைமுறைகள் பேணப்பட வேண்டும். ஆனால் இதே நிலை எத்தனை பெண்களுக்கு இருக்கிறது. தொழிலுக்குப் போய்வரும் பெண் அவள் சந்தையில் விற்பனை செய்பவளாக இருந்தாலும் உயர்பதவியிலிருப்பவளாக இருந்தாலும் வீடு வந்து சேர்ந்ததும் நேரே சமயலறைக்குப் போய் அடுப்பு மூட்டி விட்டுத் தான் உடுப்பு மாற்றித் தனக்கும் ஏனையோர்க்கும் கொடுக்க வேண்டும். சனி ஞாயிறு கூட அவளைப் பொறுத்தவரையில் ஓய்வற்ற நாட்கள் தான். இப்படியான சூழ்நிலையில் அவளது அசௌகரியங்களைத் தீர்ப்பதற்கு நாம் முன்வர வேண்டும். நமது சமயலறையை நவீனப் படுத்த வேண்டியதொரு காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். அதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பது கணவரதும் வீட்டின் ஏனைய அங்கத்தவர்களதும் தலையாய கடமை. அந்தச் சூழலில் அவள் பார்க்கும் தொழிலில் அவளது திறமை உழைப்பு வெளிப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

## இல்லப் பொறுப்புகளை பெண் தனியாக தாங்கி வருந்தும் நிலை மாறவேண்டும்

(தொடரும்)




# பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

## நூறுண்டு கழித்துக் கிடைத்த கடிதம் பிரிட்டிஷ் படையைக் காப்பாற்றியது

116 ஆண்டுகளுக்கு முன்னர் கொடுக்கப் பட்ட கடிதம், நல்லவேளை 1 நிமிடம் முன்னதாக கையளிக்கப்பட்டது.

இதனால் பட்டினியால் சாகவேண்டிய நிலையில் இருந்து பிரிட்டிஷ் படைப் பிரிவு ஒன்று காப்பாற்றப்பட்டு விட்டது.

நடந்தது இதுதான்:- 1915 இல் முதலாவது உலக யுத்தம் நடந்த சமயம், பிரிட்டிஷ் படைப்பிரிவு ஒன்று சினாய் பாலைவனத்தில் உள்ள கோட்டை ஒன்றில் உணவு, தண்ணீர் இன்றி வாடிக் கொண்டு இருந்தது.

ஆளுக்கு ஒரு பைந்து தண்ணீர் கூட இல்லாத நிலை. உணவும் இல்லை என்ற கட்டத்துக்கு வந்து விட்டது.

ஜெர்மன் படைகள், அரபு பழங்குடிகள் கோபத்துடன் பிரிட்டிஷ் படையைத் தேடிக் கொண்டிருந்தனர்.

எதிரியின் துப்பாக்கிக் குண்டுக்குத் தப்பினாலும் தண்ணீர்த் தட்டுப்பாட்டில் இருந்து உயிர்தப்ப முடியாது என்ற இக்கட்டான நிலை பிரிட்டிஷ் படைக்கு.

எப்படி இந்த நிலையில் இருந்து மீள்வது? என்று பிரிவின் தளபதி கஸால் தலையைப்போட்டு உடைத்துக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயம், அவரின் அலுவலகத்தினுள் சுருங்கிய தோலுடன் கூடிய வயோதிபர் ஷேக் ரபாய் நுழைந்தார்.

"கப்டன் கஸாலுக்கு ஒரு கடிதம் கொண்டு வந்துள்ளேன். இவ்வளவு காலமும் அதைக் கொடுக்கக் காத்து இருந்தேன்" இப்படி ஷேக் ரிபாய் சொன்னார்.

கப்டன் கஸால் குழம்பினார் ஷேக்கிடம்இருந்து கடிதத்தை வாங்கினார்.

அக்கறையுடன் கடிதத்தை வாசிக்கத் தொடங்கினார்.

"கஸால்" – என்று கடிதம் ஆரம்பித்தது.

பிரெஞ்சு மொழியில் தான் கடிதம் எழுதப் பட்டிருந்தது.

"அதிஷ்டவசமாக எனது இரண்டாவது தாய்மொழி பிரெஞ்சு தான் என்று உதவியாளரிடம் சொன்ன கப்டன் கஸால் திடீரென்று ஷேக்கைப் பார்த்துக் கேட்டார். "இக்கடிதம் எப்படிக் கிடைத்தது ?"

"மாவீரன் நெப்போலியன் தான் இக்கடிதத்தை என்னிடம் தந்தார்" — ஷேக் பதிலளித்தார்.

"கப்டன் கஸாலிடம் தான் இக்கடிதத்தை ஒப்படைக்கும்படி நெப்போலியன் சொன்னார். இதைக் கையளிப்பதற்காக எத்தனை ஆண்டுகள் காத்து இருந்து விட்டேன். எவ்வளவு ஆண்டுகள் என்பதை என்னால் கணக்கு வைக்க முடியவில்லையே"– இப்படிஷேக் ரிபாய் சொன்னார். கப்டன் கஸால் ஆச்சரியப் பட்டார்.

"நம்பமுடியவில்லையே! நெப்போலியன் எகிப்துக்கு 'வந்தது 116 ஆண்டுகளுக்கு முன்னர் அல்லவா!"—இப்படிக் கூறிய படி கடிதத்தை வாசிக்கத் தொடங்கினார்.

கடிதம் கூறியது:-

அன்புள்ள கஸால்', ஊர்ப்பையனிடம் கொடுத்து அனுப்பிய கட்டளைப்படி, கோட்டைக்கு அருகில் புதைத்து வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருள்களையும் ஆயுதங்களையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

தேவைப்பட்டதை எடுத்த பின்னர் மிகுதியை அழித்து விடுங்கள்.

எகிப்திய எல்லை நோக்கி வாபஸாகுங்கள். மூன்று பாதைகள் உள்ளன. கரையோரப்பாதையைப் பாவிக்காதீர்கள்.

பாலைவனத்தின் மத்திய பகுதி ஊடாக அணி வகுத்துச் செல்லுங்கள். வரைபடத்தை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்.

தண்ணீர் இருக்கும் இடங்கள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.

இப்படிக்கு
நெப்போலியன்
போனேபார்ட்'

கடிதத்தை வாசித்து முடித்த கப்டன் கஸால் நம்பமுடியாத நிலையில் உதவியாளரைப் பார்த்தார்.

கப்டன் கஸால் உதவியாளரிடம் சொன்னார், 'நெப்போலியனின் படையில் 1799 ஆம் ஆண்டில் எனது பூட்டனார் பணியாற்றினார். அவருக்குத் தான் இக் கடிதம் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

இக்கடிதம் எனது பூட்டனாருக்குரியது என்றால், இந்த இடத்தைத் தோண்டிப் பார்ப்பது நல்லது'–

அதன்படி நிலம் தோண்டப்பட்டது. உணவுப் பொருள்கள் கிடைத்தன.

116 ஆண்டுகளுக்கு முன்னர் நெப்போலியன் எழுதியகடிதம் பிரிட்டிஷ் படைப்பிரிவை இறுதி நிமிடத்தில் காப்பாற்றி விட்டது.

அக்கடிதத்தில் கூறப்பட்டபடி பிரிட்டிஷ் படை வாபஸாகியது.

1799 ஆண்டில் நெப்போலியன் கடிதத்தைக் கொடுக்கும் போது ஷேக் ரிபாய்க்கு வயது 25. கப்டன் கஸாலிடம் கடிதத்தை ஒப்படைப்பதற்காக இரண்டு தங்கத் துண்டுகளையும் ஷேக்குக்கு நெப்போலியன் கொடுத்தார்.

கடிதத்துடன் ஷேக் கோட்டைக்கு வந்தார். கோட்டை கைவிடப்பட்டிருந்தது. ஷேக்கினால் கடிதத்தைக் கையளிக்க முடியவில்லை

116 ஆண்டுகள்வரை காத்து இருந்தார். ஷேக்குக்கு 141 வயதாகியது.

அப்போதுதான் இன்னொரு கப்டன் கஸால் [illegible] தெரிய வந்தது. உடனே போய்க் கடிதத்தை பேரனை கப்டன் கஸாலியிடம் கொடுத்தார்.

இதனால் நெப்போலியனின் யுத்தத் திறமை வெளிப்பட்டது. இறக்க [illegible] பிரிவு காப்பாற்றப்பட்டது.

### புத்தகம் பற்றி ஒரு புதுக்கணக்கு

புத்தகம் வெளியிடுவதில் ரஷ்யாவுக்குத்தான் முதலிடம் கிடைத்து வருகின்றது.

ரஷ்யாவில் ஆண்டு தோறும் 85,487 புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன.

இரண்டாவது இடத்தை அமெரிக்கா பெறுகின்றது. இங்கு 80,569 புத்தகங்கள் வெளிவருகின்றன.

1971 ஆம் ஆண்டில் இந்தியாவில் 13,614 புத்தகங்கள் வெளியிடப்பட்டன. இதன்படி இந்தியாவுக்கு 7 வது இடம் கிடைத்துள்ளது. உலகம் முழுவதிலுமுள்ள புத்தகங்கள் வெளியீடுகளைக் கணக்கெடுத்தால் 10 லட்சம் பேருக்கு 148 புத்தகங்கள் வீதம் வெளியிடப்படுகின்றதாம்.

### காவல்கார ஓநாய்

வீடுகளைநாய் காவல் செய்வது பழைய கதை ஆனால் அப்பிள் தோட்டத்தை ஓநாய் காவல் செய்வது புதிய கதை.

ரஷ்யாவில் ஜோர்ஜியா மாநிலத்தில் ஸ்நோ என்ற கிராமம் உள்ளது.

ஐயோரம் குருஷாஉரி என்ற கிராமவாசி மலைப் பகுதியில் ஒரு ஓநாய்க் குட்டியைக் கண்டு எடுத்தார் வளர்க்கத் தொடங்கினார்.

அது வீட்டு ஓநாயாக மாறிவிட்டது. இப்போது ஐயோரத்தின் அப்பிள் தோட்டத்தைக் காவல் காக்கிறது.

### சிறைப் பறவை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கனகசபை கண்டு விட்டார்.

பூரணம் தான் எதிர்ப்பட்டாள்.

'உன்ரை கொப்பன் வீட்டுக்காசு எண்டு நினைச்சாயோ? பார்சல் கட்டிக் கொடுக்கிறவாம் பார்சல்...'

அவர் கத்தினது தான் மிச்சம். பூரணமோ திலகமோ அதைக் கவனத்துக்கு எடுக்கவில்லை.

சிலநாட்களில் கிராமத்தில் 'மஞ்சள் புரட்சி' நடந்தது. இளைஞர்கள் வீடுகளை முற்றுகை இட்டனர். பெண்கள் ஒரு உத்வேகத்துடன் தங்கள் நகைகளைக் கழற்றிக் கொடுத்தனர். விஷயம் கேள்விப்பட்டு கனகசபை உள்ளுக்குள் பயந்தார். அடைவு பிடிக்கும் தொழில்தானே அவரின் ஜீவநாடி!

அவரின் வீட்டுக்கும் இளைஞர்கள் சிலர் வந்தனர். தங்கள் நோக்கங்களை விபரமாக எடுத்துக் கூறினார்கள்.

அவர்கள் கூறுவதை எல்லாம் வெகு நுணுக்கமாகக் கேட்டுக் கொண்டிருந்த சரசு சடாரென்று தன் கழுத்துச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தாள்.

தனது அறையில் நின்று கதவு இடுக்கால் நடப்பவற்றை எல்லாம் கனகசபை பார்த்துக் கொண்டு நின்றார்.

அவர்கள் வீட்டை விட்டு வெளியே சென்றதும் சீறும் புலியென பாய்ந்து அறையை விட்டு வெளியே வந்தார்.

'என்ன துணிவில சங்கிலியைக் கொடுத்தனி?

சரசுவைப் பார்த்துக் கேட்டார்.

'சங்கிலி கொடுக்கத் துணிவு ஏன்?

சரசுவின் வழக்கமான குறும்பு கலந்த சிரிப்பு.

'நீயும் பார்த்துக் கொண்டு நிண்டனியே? ஏதாவது சொல்லி அவங்களைக் கலைக்காமல் அவள் சங்கிலியைக் கழட்டிக் கொடுக்க நீயும் பேசாமல் நிற்கிறாய்... நானும் இஞ்சை நடக்கிறதெல்லாம் பார்த்துக்கொண்டு தான் நிண்டனான்!'

'ஏன் கத்திறியள்இப்ப! வெளியாலை வந்திருக்கலாமே?'

பூரணம் கூறினாள்.

'நான் உழைச்சு வேண்டின சங்கிலி! நான் விரும்பித்தான் கொடுத்தேன். நீங்கள் ஒருவரும் சண்டை பிடிக்க வேண்டாம்!'

சரசு கூறிவிட்டு உள்ளுக்குச் சென்றாள்.

கனகசபை வழமை போல் ஒரு பாட்டம் கத்தித் தீர்த்து விட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

சந்திரன் வீட்டுக்கு வந்ததும் திலகம் நடந்ததைக் கூறினாள் சரசுவின் அறைக்கு நேரே சென்றான் சந்திரன்.

'இஞ்சை கையைக் கொடு! நீதான் முறையான வேலை செய்திருக்கிறாய்!'

சங்கிலியைக் கொடுத்ததற்கு சந்திரன் சரசுவைப் பாராட்டினான்.

சமீபத்தில் இவையெல்லாம் சந்திரனின் நடவடிக்கைகளில் ஏற்பட்டிருந்த மாற்றங்கள்.

திலகம் சந்திரனின் போக்குகள் பற்றி ஒரு நாள் பூரணத்திடம் விபரமாய்க் கூறினாள்.

'கடவுளே...!'

பூரணம் தலையில் கையை வைத்தாள்.

'கந்தசட்டி விரதம் இருந்து பெத்த பிள்ளை–' ஒரு நாளைக்கு அவங்கள் வந்து கொண்டு போகப் போறான்களே! எங்கடை முத்துத்தம்பியின்ரை பேரனைக் கொண்டு போய் இப்ப ஒரு வருசமாகப் போகுது! இன்னும் விடவில்லை!

இவனுக்கு ஏன் புத்தி இப்பிடிப் போகிறது?' தலையைப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

'அம்மா, இப்ப ஏன் கத்திமாயுறீங்கள்? இப்ப என்ன நடந்தது? சந்திரனைப் போல ஆயிரம் சந்திரன்கள் இப்ப ஒரு இலட்சியத்துக்காகப் போராடுகிறார்கள். நீங்கள் மறித்தாலும் அழுது புரண்டாலும் அவன் தன்னுடைய வழியில் தான் செல்வான்.

நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது! உங்களைப்போல எத்தனையோ தாய்மார் இன்று மௌனக் கண்ணீர் வடிக்கிறார்கள் தெரியுமோ?' ஏதோ நடக்கட்டுமென்று பேசாமல் இருங்கோ!'

திலகம் கூறுவதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த பூரணம் மலங்க மலங்க விழித்தாள்.

### வடக்கே..:

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சித்தித்துக் கொண்டிருந்தான்.

இன்னும் இந்தியாவுக்குக் கப்பல் ஏற ஒரு வாரம் இருக்கின்றது. பொலிஸ்ரர் துணி ரோல் ஒன்று, யெலோலைன் காற்சட்டைத்துணி, ஆறு டசின் லக்ஸ், கராம்புக் கட்டு, லைற் என்பன இந்தியாவில் கொள்ளை லாபம் அடிக்கும் நோக்குடன் இலங்கேசனால் வாங்கப்பட்டன

பகல் இரண்டு மணிக்குத் தான் வாங்கிய சாமான்களுடன் இலங்கேசன் வீடு வந்து சேர்ந்தான் எல்லாமாக இப்போது நல்லசிவம் தந்த காசில் ரூபா மூவாயிரம் செலவாகி விட்டதை இலங்கேசன் உணர்ந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பழவகை உற்பத்திப் பெருக்கம் பல மடங்காகச் சில வழிகள்

பலரின் வீட்டு வளவுகளில் பழமரங்கள் உண்டு ஆனால் இவைகளிலிருந்து கிடைக்கும் பழங்களோ மிகக் குறைவு. சிறிது கவனம் கொடுப்பின் விளைச்சலை இரு மடங்கு அல்லது மும் மடங்காகப் பெருக்குவது முடிந்த காரியம். ஆகவே இதைச் செயல்படுத்தும் முறைகளை இங்கே கவனிப்போம்.

உங்கள் வீட்டிலுள்ள எலுமிச்சை மரம் ஓராண்டில் 250 பழங்கள் கொடுக்குமாயின் அது உங்கள் வீட்டுத் தேவைக்குத் தன்னும் போதியதாக இருக்க மாட்டாது. 1986 ஆம் ஆண்டில் இம்மரத்திற்குக் கொடுக்க வேண்டிய முறையான பராம

## கமமும் புலமும்

ரிப்பை கொடுப்போமானால் 1987 ஆம் ஆண்டு 500 பழங்களுக்கு மேலும் 1000 பழங்கள் வரையும் பறிப்பீர்கள். இந்த மேலதிக 250 அல்லது 750 பழங்கள் வீட்டுத் தேவையையும் பூர்த்தி செய்து அதிகரித்த வருவாயையும் கொடுக்குமல்லவா? அப்படியாயின் ஏன் நாம் எதிர்பார்க்கும் மேலதிக வருவாயின் பாதியை இச் செடிக்கு முதலாண்டில் செலவிடத் தயங்கவேண்டும்? மேலும் தொடர்ந்து வரும் பல ஆண்டுகளுக்கு பராமரிப்புச் செலவு அது கொடுக்கும் மேலதிக வருவாயின் 20 வீதம் 10 வீதம் என்ற வகையில் குறையத் தொடங்கும். ஆனால் விளைச்சலோ 250 பழங்களிலிருந்து 5 ஆண்டுகளில் 2 000 அல்லது 2,500 ஆக அதிகரிக்கும். இதைப் படிக்கும் போது உங்க

### உற்பத்திக்கான ஆரம்ப முறைகளையும் செலவுகளையும் திட்டமிட வேண்டும்

ளுக்கு நம்ப முடியாமலிருக்கலாம். ஓராண்டு பராமரித்த பின் கவனிப்பீர்களாயின் திடமாக நம்புவீர்கள். 3 ஆண்டுகளுக்குப் பின்பு உங்கள்

**பனையவேள்**

இனத்தவரோ அயலவரோ உங்களிடம் வந்து பராமரிப்பு முறையை அறிந்து அவ்வகையில் தாங்களும் பராமரிப்பதற்கு ஆரம்பிப்பீர்கள் என்பது திண்ணம்.

#### பராமரிப்பு

மண்ணின் அமைப்பு களித்தன்மை கொண்டதாகவோ மணல் கொண்டதாகவோ செம்பாடாகவோ இருக்கலாம். எதுவாயினும் முதல் முறை செடியைச் சுற்றி எல்லாப் புறமும் கிளைகள் இருக்கும் பரப்பளவிற்கு ஏற்ப மண் கொத்திப் பண்படுத்தப்பட வேண்டும். உச்சிப் பொழுதின் போது நிலத்தில் நிழல் விழும் பிரதேசம் எல்லாம் மேலதிகமாக 1 முழ விஸ்தீரணம் சுற்றி வர வெளியேயும் கொத்துங்கள். எலுமிச்சை, தோடை, திராட்சை, கொடித்தோடை ஆகிய பழமரங்களுக்கு 9 அங்குல ஆழம் வரை கொத்தவும். ஏனைய பழமரங்களுக்கு ஒரு அடிக்குக் குறையாத ஆழத்திற்கு மண் கொத்தப்பட வேண்டும் மாதிரியிலிருந்து ஒரு முழம் சுற்றிவர கொத்தக் கூடாது. அதற்குப் பதிலாக இந்த இரண்டு முழ விட்டம் வரையுள்ள பிரதேசம் (மரத்தை மத்தியில் வைத்து) 1 அடிக்குக் குறையாத உயரத்திற்கு மண்கொட்டி உயர்த்தி மண்வெட்டியால் அழுக்கப்பட வேண்டும். மரங்கள் 5 வருடத்திற்கு மேற்பட்டவையாயின் அதன் வளர்ச்சிக்கு ஏற்ப இவ்விதம் மண் அணைக்கப்பட வேண்டிய பகுதி இரண்டு மடங்கு வரையும் விஸ்தரிக்கலாம்.

கொட்டு மண்ணின் உயரமும அவ்விதமே அமையவேண்டும். இதற்குத் தேவைப்படும் மண் கொத்த வேண்டிய இடத்திற்கு அப்பால் ஒரு குழி அமைத்து அங்கிருந்து கொண்டுவரப்பட வேண்டும். ஒரு முறை கொத்துக் கொடுத்த நிலத்திற்கு சில தினங்களின் பின் இரண்டாவது கொத்துக் கொடுப்பது அவசியம். கொத்தும் பொழுது நிலம் ஓரளவு ஈரலிப்புடன் இருக்க வேண்டும். இவ்விதமில்லா விட்டால் நீரிறைத்தோ ஊற்றியோ ஈரப்படுத்திய மறுநாள் அல்லது 36 மணித்தியாலங்களின் பின் கொத்துவது வசதியாயிருக்கும்

இவ்விதம் கொத்திய நிலத்தை 4 பாத்தியாகவோ அல்லது 6 அல்லது 8 ஆகவோ தனித்தனிப் பாத்திகளாக அமையுங்கள். ஓர் பாத்தி 16 சதுர அடிக்குக் குறையாது இருத்தல் வேண்டும். ஆனால் எந்த பழமரத்தைச் சுற்றியும் கொட்டிய மண்ணை நிரந்தரமாக இருக்கவிட வேண்டும். அப்பகுதியிற்கு நீரிறைக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் இவ்விதம் குவித்த மண்ணில் வல்லாரல், கொடிப்பசளி, பொன்னாங்காணி போன்ற கீரை இனங்களை நாட்டுவது நலலது. அப்படி நாட்டினால் பக்கத்திலுள்ள பாத்தியிலுள்ள நீரை இக் கொட்டு மண்ணிலுள்ள கீரை இனங்களுக்குக் காலால் அல்லது சிறிய பாத்திரத்தின் உதவியால் எத்தவும். போதியளவு நீர் இறைப்பதானால் ஒரு வாரத்திற்கு ஒரு இறைப்பு போதும். பழமரங்களின் கீழே பயறு, உழுந்து, கொட்டிப்பயறு ஆகியன பயிரிட உகந்தவை தண்டங்கீரையும் இங்கே பயிரிடலாம். கற்பூரவள்ளி இப்பாத்திகளில் நாட்ட உகந்த செடி.

(தொடரும்)

# பயன்பாடுகள் பல நிறைந்த வடமராட்சியின் கடல்வளம்

**சி. அம்பிகாவரன்**

யாழ் நங்கை நல்லாளைப், போர்த்திக் கொண்டிருக்கும் நீல வண்ணச் சேலையாக அமைந்துள்ள, ஆழ்கடலின் முகதலைப் பாக மெருகூட்டிக் கொண்டிருப்பது, அன்னாளின், வடகீழ்ப்பகுதியைச் சூழவுள்ள கடற் பிரதேசமாகும். இப் பிரதேசத்தில் இன்று அரசியல் அலைகள் மோதிக் கொந்தளிக்கின்றன. அதனால் இது அழகும் ஒளியும் இன்றி. வளமும், பயனும் குன்றி வீணே இருக்கின்றது; கண்ணிருந்தும் குருடாயிருப்பார் போல், வளமிருந்தும் விழலாய் இருக்கின்றது. ''முத்துக் குளிப்பதொரு தேன் கடலிலே; மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே, நத்திநமக்கினிய பொருள் கொணர்ந்து நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே'' என்று பாரதி அன்று கண்ட கனவு போல, எமது கரைகளிலும் நமது செல்வங்களைப் பெறுவதற்காக பல நாட்டு வணிகர் பலர் நாம் விரும்பிய பொருள்களையெல்லாம் எமக்கு உவந்து தரும் பொருட்டு குவிந்து கொள்ளும் அந்த நாளும் எந்த நாளோ என்ற ஏக்கம் ஆக்கத்திலே ஊக்கமுள்ள எந்த மனத்தையும் வாட்டுவது இயற்கையே.

கடலின் ஆழத்தைப் போலவே அதன் வளமும் அளப்பரியது ஒன்றாகும். இன்று அனைத்துலக ரீதியில் உணவுப்பொருட்களின் பற்றுக்குறையாலும், அதிகூடிய சனத்தொகைப் பெருக்கத்தாலும் உலகநாடுகள் கட்டுண்டு கிடக்கின்றன. விவசாயத்துக்குட்பட்டுள்ள நிலம் நெகிழ்ந்து கொடுக்காத காரணத்தால், உணவுற்பத்தியைப் பெருக்குவதும் கடினமாகவே உள்ளது. இலங்கை போன்ற குறை விருத்தி நாடுகளில் இத் தாக்கம் இன்னும் அதிகமாகவே உள்ளது.

இங்கிலாந்து சிறப்புப் பெற்றமைக்கும். செழிப்புற்றமைக்கும் முக்கிய காரணம் அது தீவாக உள்ளமையும், பூகோள ரீதியில் அதன் நிலையம் கடலுடன் அதிக தொடர்பு கொண்டுள்ளமையும் ஆகும். இதே போலவே வடமராட்சியும் கடலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதால், அவ் வளத்தைப் பயன்படுத்தி அப்பகுதி சிறப்படையலாம் என்பது திண்ணம்.

வடமராட்சியின் சனத்தொகை 1,12,499 ஆகும். இவ்வதிகரித்த சனத்தொகைக்கு உணவுற்பத்திக்காகவுள்ள சகல துறைகளிலிருந்தும் உச்சப் பயனைப் பெறவேண்டியது அவசியமாகிவிட்டது

### உச்சப் பயன்காணும் வகையில் முயற்சிகள் திட்டமிடப்பட வேண்டும்

இதனடிப்படையில் மீன்பிடித்துறையும் அதிகூடிய பயனைத் தரும் வகையில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். சாதாரண உணவுப் பொருளாக மட்டுமன்றி, சிறந்த ஒரு சத்துணவாகவும் இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், வேலையின்மை பூதாகாரமாக அச்சுறுத்தி வரும் இவ்வேளையில், வேலையின்மையுடன் தொடர்பான ஏனைய பிரச்சினைகளுக்கும் இவ் வளத்தின் முறையான பயன்பாடு மூலம் தீர்வு காண முடியும்.

கடல்வளங்கள் பற்றிய வரிசையிலே, பொதுவானதும், அக்கியமானதும் மீன்பிடித்தொழில் ஆகும். மூலதனம் இன்றியே வருமானம் தரும் ஒரு துறையாக இது கருதப்படுகின்றது. தொண்டைமானாறு தொடங்கிச் சுண்டிக்குளம் வரையான கடற்கரையானது 24 மைல் நீளமானதாகும். இக் கடற்கரையின் வடக்கே வங்காள விரிகுடாவும், கிழக்கே இந்து மகாசமுத்திரமும் காணப்படுவதால், மீன்பிடித் தொழிலானது இப்பகுதியில் சிறப்பிடம் பெற்று விளங்குவதற்கு வாய்ப்புக்கள் அதிகம். இக்கடற்கரைப் பிரதேசத்தில் மூன்று பகுதிகளாக மீன்பிடித்தல் மேற்கொள்ளப்படுகிறது. அவையாவன :-

(i) கடற்கரைகளில் தூண்டில், வலைவீசல், முறை.

(ii) கண்ட மேடைப் பகுதிகளில் வள்ளங்கள், கட்டுமரங்களால் மீன் பிடித்தல்.

(iii) ஆழ்கடல் பகுதிகளில் கப்பல்கள் மூலம் மீன்பிடித்தல் இப்பகுதியில் பெரும் மீன் இனங்கள், சிறிய இனங்கள், நண்டுகள், ஆமைகள் முதலானவை பிடிக்கப்படுகின்றன.

கடற்கரையிலிருந்து 100 பாகைக்கோடு வரையான பகுதிகள் மீன்பிடித்தற்கேற்ற வளமான பகுதிகளாகக் காணப்படுகின்றன. ஆனால் இப்பகுதி முழுவதிலும் மீன்பிடித்தல் நடைபெறவில்லை மிகக் கூடுதலான மீன்கள் 5 முதல் 15 பாகைக் கோட்டிற்கிடைப்பட்ட பகுதிகளிலேயே பிடிக்கப்படுகின்றது.

[தொடரும்]




## நலம்தரும் நாகரிக...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

இன்று போல் என்றும் பிரியாது நட்போடு விளங்கி ஒருவருக்கு ஒருவர் உதவி புரிந்து வாழுங்கள். நல்லன போலவும் நியாயம் உடையன போலவும் நீங்கள் இருங்கள். உமது அன்பு நெஞ்சத்தை இடை புகுந்து பிரித்தற்கு முயலும் அயலோரின் சிறப்பற்ற சொற்களைக் கேட்டு விடாதீர்கள்.

இன்று போலவே என்றும் இணைந்தே வாழுங்கள். வெற்றிமேல் வெற்றி பெற்று நீங்கள் உயர்வடைக''

—இவ்வாறு புலிக் கொடியோனையும் மீன் கொடியோனையும காரிக் கண்ணனார்வாழ்த்தினர்.

''......பால்நிற உருவின் பனைக்கொடி யோனும்
நீலநிற உருவின் நேமி யோனும் என்று
இருபெருந் தெய்வமும் உடன்நின் ருஅங்கு
உருகெழு தோற்றமொடு உட்குவர விளங்கி
இன்னீர் ஆகலின் இனியவும் உளவோ
இன்னும் கேளன்மின் நும் இசைவா ழியவே.
ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர் இருவீரும்
உடன்நிலை திரியீர் ஆயின் இமிழ்திரைப்
பௌவம் உடுத்தஇப் பயங்கெழு மாநிலம்
வையகப் படுவது பொய்யா காதே.
அதனால்,
நல்ல போலவும் நயவ போலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காதல் நெஞ்சின் நும் இடைபுகுதற்கு அலமரும்
ஏதில் மாக்கள் பொதுமொழி கொள்ளாது
இன்றே போல்கநும் புணர்ச்சி வென்று வென்று
அடுகளத்து உயர்கநும் வேலே......''

என்பது காரிக்கண்ணனார் சோழனையும் பாண்டியனையும் ஒருங்கே கண்ட போது பாடிய பாடல். இது புறநானூற்றின் 58 ஆம் பாடலாக அமைந்துள்ளது.

தமிழக வரலாற்றில் வேந்தர்களுக்கிடையே ஏற்பட்ட இந்த ஒற்றுமை ஒரு திருப்பு முனையாக அமைந்தது. தாயகம் வளம் சிறந்தோங்கியது. தாயக மன்னர்களின் ஒற்றுமையைக் கண்டு வடபுல ஆரிய அரசர் அஞ்சி நடுங்கினர். அவர்கள் தூக்கத்தையே மறந்தனர்.

''துஞ்சாக் கண்ண
வடபுலத்து அரசே''

என்று புறநானூறு இவ்வுண்மையைக் கூறுகிறது.

தமிழக வேந்தர்களின் ஒற்றுமை என்பது வெறும் கற்பனைக் கதையல்ல. புறநானூற்றுச் செய்திகளை வட இந்திய வரலாறும் அரண் செய்கிறது. வட நாட்டுச் சாசனங்களில் திராவிட மன்னரின் ஆற்றல் மிக்க - வெல்ல முடியாத - கூட்டணி பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இத்தகைய ஒரு கூட்டணிதான் பௌத்தமத வேந்தனாகிய மண்ணாசை பிடித்த, கொலை வெறி கொண்ட அசோகனைத் தர்ம அசோகனாக மாற்றியது. வீர விஜயம் (வெற்றியுலா) மேற்கொண்டு தெற்கு நோக்கி அசோக மாமன்னன் வந்து கொண்டிருந்தான். வழியில் எதிர்ப்பட்டவர்களை எளிதாக வென்று கொண்டு முன்னேறினான். ஆனால், திராவிடர் கலிங்கம் அசோகனது படையை மிக மூர்க்கமாக எதிர்த்தது.

அசோகனின் கொலை வெறிக் கண்களைத் திறக்கும் வகையில் திராவிட சேனை அசோகன் படை வீரர்களை எல்லையின்றிக் கொன்று குவித்தது. தன்னவர்களின் மரணமே கொலை வெறி பிடித்த அசோகனைத் தர்மவிஜய (அறஉலா) அசோகனாக்கியது. படையோடும் கொடியோடும் முடியோடும் கலிங்கத்துக்கு அப்பால் நகர முடியாத அசோகன் பின்னுளில் அறஉலா மூலம் சேர, சோழ, பாண்டிய, சத்திய புத்திர (அதியமான் பரம்பரை) மன்னர்களை அரவணைத்துக்கொண்டான். மண்ணாசையும் கொலை வெறியும் கொண்ட அசோகனைத் தர்மாசோகன் ஆக்கிய பெருமை திராவிட கலிங்கத்துக்கே உரியது. திருவிடத்தலைவர்களின் ஒற்றுமைக்கே உரியது.

அசோகனைப் போலத் திராவிடர் கூட்டணிக்கு எதிர் நிற்க முடியாது கவலை கொண்ட வடபுலி வேந்தன் காரவேலன். இவனது சாதி கும்பாக் கல்வெட்டு சேர, சோழ, பாண்டியர் முதலிய திராவிட வேந்தர்களது வெல்ல முடியாத கூட்டணியைப் பற்றிக் கூறுகிறது

தமிழகத் தலைவர்கள் எப்பொழுது தமது உட்பகையை மறந்து ஒன்றுபட்டு நின்றார்களோ அப்பொழுதெல்லாம் உலகம் தமிழரைக் கண்டு நடுங்கியது தமிழகம் எப்பொழுது பிளவுபட்டுத் தன்னுள் மோதிக் கொண்டதோ உலகம் அப்போது தமிழகத்தை அடிமை கொண்டது.

## சிவானந்தப்...

[3 ம் பக்கத் தொடர்ச்சி]

தூய சிந்தனையோடு, தெய்வீகக் கலப்புடையதாக மாறுமிடத்து மிகச் சிறந்த பயன் விளைந்தே தீரும். சிந்தையடக்கச் சிவகதி வருந்தானே. ''எண்ணிய எண்ணியாங் கெய்துவர், எண்ணியர், திண்ணியராகப்பெறின்'' என்று திடம் பட உரைத்தார் திருவள்ளுவ நாயனார். இன்று காலை முதல் நாமும் சிவசிந்தனையோடும், பஞ்சாக்ஷர செபத்துடனும், உண்ணாவிரதமிருந்தும், இரவு முழுதும் கண்விழித்து, வசதியுண்டேல் சிவாலயங்களில் நடைபெறும் நாலுகாலப் பூஜைகளிலும் கலந்து கொண்டு, நாளைக் காலை இலேசான உணவுடன் பாரணை செய்து, விரதத்தை முடித்துச் சிவருள் பெறுவோமாக.

முழுநாளும் உண்ணாவிரதம் இருக்க இயலாதவர்கள் தத்தம் சக்திக்கேற்ப பானங்கள் அருந்தியோ பழங்கள் மட்டும் உண்டோ, அல்லது நண்பகலில் உப்பின்றி அவித்த காய், கறி, கிழங்குகளை உண்டோ, உபவாசம் இருக்கலாம். இல்லங்களிலும், தபோவனங்களிலும் அன்பர்கள் கூடி அனல் வளர்த்து சுற்றியிருந்து திவ்ய நாம சங்கீர்த்தனமோ, பஞ்சாக்ஷர மந்திர பாராயணமோ செய்தும் இரவுக் காலத்தைக் கழிக்கலாம்.

# பொருளியல் துறையும் வரைவு இலக்கணங்களும்

பொருளியல்பற்றி பல வரைவிலக்கணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன ஆனால் கொடுக்கப்பட்ட வரைவிலக்கணங்களெல்லாம் பொருளியல் பற்றி சரியான வரையறையைத் தருவனவாக இல்லை. ஏனெனில் தரப்பட்ட வரைவிலக்கணங்கள் சில பொருளியலை குறுகிய இயலாகவும், வேறு சில பரந்த ஒரு இயலாகவும் சித்தரிக்கின்றனவே ஒழிய பொருளியல் என்றால் இதுதான் என சரியான திட்டவட்டமான ஒருமித்த கருத்தைத் தருவனவாக இல்லை.

செல்வம் பற்றிய விஞ்ஞானம்;

நாடுகளின் செல்வ உற்பத்தி, அதன் துகர்வு என்ற ஆய்வு அடிப்படையில் இவ்வரைவிலக்கணம் அமைகின்றது. அடம் சிமித் போன்ற பழம் பொருளியலாளர்கள் செல்வம் பற்றிய விஞ்ஞானமே பொருளியல் என வரையறை செய்துள்ளனர் இவர்கள் செல்வம் பற்றிய விஞ்ஞானமே பொருளியல் எனக் கூறினாலும் அதைப் பரந்த அடிப்படையிலான கருத்தாகக் கருதவில்லை. இவ் வரைவிலக்கணகாரர் சமூகத்தின் மேலதிகமாக இருக்கும் பணமே செல்வம் எனக் கூறியதோடு பொருளியலாளர்கள் இச் செல்வத்தை அதிகரிப்பதற்கான வழிவகைகளையும் தெரிவிக்கவேண்டும் எனவும் கூறினர். இக் கூற்றின்படி பொருளியல் என்பது செல்வத்தை உற்பத்தி செய்கின்ற நுகர்கின்ற மக்களைப் பற்றிய ஆய்வாக மட்டுமே அமைகின்றது செல்வத்தை உற்பத்தி செய்யாத அதாவது உற்பத்தியில் பங்குபற்றாத ஏனையோர் பற்றி ஆய்வதில்லை. ஆனால் பொருளாதார நலன் என்று கூறும் [illegible] வாழும் எல்லா மக்களின் நலனும் [illegible] தாகும். எனவே குறுகிய கருத்திலமைந்த இவ் வரைவிலக்கணம் ஒரு பக்க ஆய்வாக அமைந்தது என 19 ம் நூற்றுண்டில் பொருளியலாளர்களினால் கண்டிக்கப்பட்டது.

மனித நலன் பற்றிய விஞ்ஞானம்:

பொருளியல் என்பது மனிதனது சாதாரண வாழ்க்கை வழி பற்றிய விஞ்ஞானம் என அல்பிரட் மார்ஷல் வரையறை செய்தார். இவரது வரைவிலக்கணத்திலும்

### முரண்பாடுகள் நிறைந்த மாறுபட்ட கருத்துக்கள்

மனிதனது பொருளாதார அம்சங்கள் ஆராயப்பட்டதே தவிர அவனது சமூக சமய, அரசியல் நடவடிக்கைகள் ஆராயப்படவில்லை. எனவே இவரது வரைவிலக்கணமும் மனிதன் எவ்வாறு வருமானம் பெறுகின்றான், எவ்வாறு செலவிடுகின்றான் என்பதை மட்டும் கருத்தில் கொள்கின்றதே தவிர முழுமையான மனித நலனையும் கருத்தில் கொள்ளாதது, குறைபாடுடையது என பிற்கால பொருளியலாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டது. மனித நலனனது லௌகீகப் பொருள்களினால் மட்டும் ஏற்படும் எனக் கூற முடியாது. உதாரணம் வைத்தியரது சேவை மனித நலனை அதிகரிக்கக் கூடியது. வைத்தியர்களும் சமுதாயத்தைப் பொறுத்தவரை அருமையானவர்களே. அடுத்து மனித நலனை எவ்வாறு அளவிடுவது என்பதும் இவ் வரைவிலக்கணத்திலின்றும் எழுகின்ற ஒரு [illegible]. பேராசிரியர் பிகு பணத்தின் மூலம் மனித நலனை அளவிடலாம் என்றார். ஆனால் கடின உழைப்பினால் ஒருவன் வேதனமாக ரூபா 1000 பெற்று அடையும் திருப்தியும் சூதாட்டம் மூலம்ஒருவன் ரூபா 1000 பெற்று அடையும் திருப்தியும் சமனாக அமையும் என கூறமுடியாது. எனவே சமவருமானத்தை பண அளவில் இருவர் பெற்றாலும் கூட அவர்கள் சமநலனைப் பெறுவார்கள் எனத் திடமாகக் கூற முடியாது.

அடம் சிமித் பொருளியலின் ஒரு பகுதியை வரையறை செய்தது போல இவர் பொருளியலின் மறுபகுதியையே வரையறை செய்தார் எனப் பிற்கால பொருளியலாளர்களால் விமர்சிக்கப்பட்டாலும் அடம் சிமித்தின் வரைவிலக்கணத்தைவிட இவரது வரைவிலக்கணம் பரந்த அடிப்படையில் அமைந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

அருமை பற்றிய விஞ்ஞானம்:

லயனல் றொபின்ஸ் என்பவரால் கூறப்பட்ட வரைவிலக்கணமானது மரபுரீதியான வரைவிலக்கணத்தை நிராகரித்து பொருளியல் பற்றிய வரைவிலக்கணத்தில் புதியதொரு வளர்ச்சிக்கட்டமாக அமைந்தது. லயனஸ் றொபின்ஸ் 'பல்வேறு வகைப்பட்ட தேவைகட்கிடையே பற்றுக்குறையாக உள்ளதும் மாற்றுப்பயன்பாட்டைக் கொண்டதுமான சாதனங்களிடையே ஏற்படும் மனித நடவடிக்கை பற்றிய ஆய்வே பொருளியல்' என்றார். இவரது வரைவிலக்கணம் மூன்று அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

I - பல்வேறுவகைப்பட்ட தேவைகள்

மக்களது தேவைகள் எல்லாம் ஒரே மாதிரியானவை அல்ல. பல்வேறு வகைப்பட்டன. அத்துடன் இத்தேவைகள் கால ஓட்டத்துக்கு ஏற்ப நாகரீக வளர்ச்சிக்கு ஏற்ப வளர்ந்து செல்கின்றன. எனவே மக்களால் தம் தேவை முழுவதையும் ஒரு போதும் நிறைவேற்ற முடியாத நிலையில் பல்வேறுபட்ட தேவகட்கிடையே முக்கிய தேவைகளை தேர்ந்தெடுக்கின்றனர்.

II பற்றுக்குறையான-சாதனங்கள்

மக்களது தேவைகள் வரையறையற்ற நிலையில் இருக்கும்போது அத்

**பாடம் பயில்வோம்**

தேவைகளை நிறைவேற்றக் கூடிய சாதனங்கள் தேவையுடன் ஒப்பிடும் போது பற்றுக்குறையாகவே உள்ளன. பற்றுக்குறை என்பதும் லயனல் றொபின்ஸ்சின் கருத்துப்படி கேள்வியைத் தொடர்புபடுத்தியே ஆராய வேண்டும். அதாவது நிரம்பலிலும் கேள்வி கூடவாக உள்ள பொருட்களையே பற்றுக்குறையான பொருட்கள் எனலாம். உதாரணம்: அழுகிய கத்தரிக்காய் நல்ல கத்தரிக்காய்களை விட குறைவாக உள்ளன. ஆனால் அழுகிய கத்தரிக்காய்களுக்குக் கேள்வி ஏற்படாததினால் அவற்றை நாம் அருமையான பொருட்கள் எனக் கூறுவதில்லை.

III – மாற்றுப் பயன்பாட்டைக் கொண்ட சாதனங்கள்:

ஒரு பண்டம் தனியே ஒரு பயன்பாட்டை மட்டும் கொண்டிருப்பின் இப்பண்டத்தின் அருமையால் எழும் பொருளியல் பிரச்சினைகள் குறைவாக இருக்கும். ஆனால் ஒரு பண்டம் பலவாறுகப் பயன்படுத்தப்படும் போது சிலவற்றின் பயன்பாடு முக்கியத்துவம் உடையதாகவும், சில முக்கியத்துவம் அற்றும் காணப்படும்.

லயனஸ் றொபின்சின் கூற்றுப்படி பல்வேறுபட்ட தேவைகள், பற்றுக் குறையான சாதனங்கள், மாற்றுப்பயன்பாட்டைக் கொண்ட அருமையான சாதனங்கள் ஆகிய மூன்றும் இணைந்தே பொருளியல் பிரச்சினையை ஏற்படுத்துகின்றனவேயொழிய இவை ஒவ்வொன்றும் தனித்தனியே பொருளியல் பிரச்சினையை ஏற்படுத்துவதில்லை.

லயனஸ் றொபின்சின் வரைவிலக்கணம், பொருளியல் வரைவிலக்கணத்தின் திருப்பு முனை எனலாம் ஏனெனில் இவரது வரைவிலக்கணம் பொருளியல்பற்றிவரையறுக்கப்பட்ட சாதனம், வரையறையற்ற தேவை என்ற இரு கருக்களை உருவாக்கியதும் பொருளியலுக்கு திட்டவட்டமான எல்லையை ஏற்படுத்திக் கொடுத்ததுமாகும். இருப்பினும் பிற்காலப் பொருளியலாளர்களால் இவ் வரைவிலக்கணமும் கண்டிப்புக்குள்ளானது. பொருளியல் பிரச்சினைகள் அருமையால் மட்டும் எழுவதில்லை. சில வேளைகளில் மிகையாலும் எழுகின்றன என அவர்கள் கருத்துரைத்தனர். 1930 ம் ஆண்டு உலக பெரு மந்தத்தின் பின் ஏற்பட்ட மிகை உற்பத்திகள் மிக முக்கிய பிரச்சினையாகப் பல நாடுகளில் காணப்பட்டது என்பதே அவர்கள் கூற்றின் ஆதாரமாகும்.

தற்கால நோக்கு:

பொருளியலுக்கு வரைவிலக்கணம் கூறுவதைப் பல பிற்காலப் பொருளியலாளர்கள் கண்டித்துள்ளனர். ஏனெனில் குறிப்பிட்ட ஒரு காலத்தை கொண்ட மையமாகக் வரையறை செய்யப்படும் இவ் வரைவிலக்கணம் வேறொரு காலப் பகுதி

(8ம் பக்கம் பார்க்க)

**அ. முத்துக்குமாரசாமி**
பி. ஏ. டிப்ளோமா
நாவற்குளி மகா வித்தியாலயம்.

**க. பொ. த. ப. (உயர்)**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

STAR VIDEO COMPLEX
Any Functions at your Home? Remember this name for VIDEO RECORDING
'RAJ-COT,' NEAR POST-OFFICE, KONDAVIL EAST, KONDAVIL.

# திருநெல்வேலி — பழங்கிணற்றடி
# ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
# தேர் வெள்ளோட்ட விழா
## சிறப்பு மலர்

உங்கள் வாழ்க்கையில் என்றோ ஒருநாள் வரும் அந்த மறக்கமுடியாத நிகழ்ச்சிகளை என்றும் உயிரோவியமாக வீடியோ படம்பிடித்திட நாடுங்கள்!
ஸ்ரார் வீடியோ கொம்பிளெக்ஸ்
'ராஜ்-கொற்' தபால்கந்தோரடி கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

Kurunchi Pharmacy
* மருந்து வகைகள்
* பால்மா வகைகள்
* உணவுப் பொருள்கள்
மற்றும் சகலவித நுகர்ச்சிப் பொருள்களை சிறந்த தரத்தில் பெற்றுக்கொள்ள
குறிஞ்சி பாமஸி
3, நவீன சந்தை, திருநெல்வேலி.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வடக்கில் எழுந்தருளி உள்ள விநாயகர் பழங்கிணற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் என்ற நாமத்துடன் மக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டு இருக்கிறார்.

பழங்கிணற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் பெருமானைச் சூழ வாழ்ந்து கொண்டிருக்கும் அடியார்கள் கடவுள் பக்தியும், கல்வியும், செல்வமும், அறிவும், பண்பாடும் நற்குணமும் உடையவர்களாக வாழ்ந்து வருகிறார்கள்.

தாங்கள் வணங்கும் விநாயகப் பெருமான் தங்களுக்கு அள்ளித்தரும் நற்பண்பையும், செல்வங்களையும் கொண்டு விநாயகப் பெருமானுக்கு பெருங்கோயில் எழுப்பினர். அத்தோடு வருடாந்த மஹோற்சவம் நடத்துவதிலும் அடியார்கள், பெரியோர், சிறியோர் என்ற பாகுபாடு இல்லாமல் ஒற்றுமையாகச் செயற்படுகின்றனர்.


விநாயகப் பெருமானின் வருடாந்தமஹோற்சவம் நடைபெற வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்துடன் கொடித்தம்ப நடும் விழா நடைபெற்றது. 1985 ம் ஆண்டு மஹோற்சவம் ஆரம்பமானது உற்சவத் தேர்த் திருவிழாவன்று ஒரு சகடையில் தேர்கட்டி திருவிழா செய்தார்கள்.

விநாயகர் தொண்டர் திரு. நாகரட்ணம் அவர்களுக்கே தேர்த்திருவிழா உபயம் வழங்கப்பட்டிருந்தது. அவர் 1985 ம் ஆண்டு ஆனி மாதம் உத்தராயணம் உத்திர தினத்தன்று, என்னை சிற்பாசிரியர் என்ற முறையில் வரவேற்று தேர் நான் வேலை தொடங்க வேண்டும் என்று கூறினர்.

1986 ம் ஆண்டு மகோற்சவத்திற்கு புதிய சித்திரத்தேரில் விநாயகப் பெருமான் எழுந்தருள வேண்டும் என்று பிடிவாதமாக நின்று கொண்டார். திரு. நாகரட்ணம் அவரின் தெய்வ வாக்கின்படி ஒரு விதமான உடன்படிக்கை மதிப்பீடும் இல்லாமல் வேலை ஆரம்பிக்கப்பட்டது.

# சித்திரத் தேரின்
## சிறப்பு அம்சங்கள்

வீரகத்தி விநாயகருக்கு அழகிய சித்திரத்தேரின் அமைப்பு சிற்ப சாஸ்திரத்தின்படி பெருமானின் மூலஸ்தான கால்பிரணவாயின் அளவுத் தோற்றம் 1/4 X 1/8 வீத தெண்டத்திற்கு அமைவாக 23' உயரம். கலசத்துடன் அச்சு 9 அடி—1 அங்குலம் வாணவரி, கரிபாதகவரி, விக்கிரவரி, பண்டிகைவரி பத்மாசனம் சீதவாசனம் சிம்மாசனம் (தாமரைமப்பூ), அமைப்பிலும், மேல் தளம் அலங்கார சித்திரத்தேரின் அமைப்புக்கு ஏற்ப எழுந்தகப் பண்டிகை 1, 2, 3, 4ம் தட்டு விமானப் பண்டிகை கடைசியாக நிலகடத்துடன் தேரின் அமைப்பு முடிவுறுகிறது. கலசம் (ஸ்தூபி) கிலத்தின் மேலே வைக்கப்பட்டுள்ளது.



தேரில் மேல் தளத்துக்கும் கீழ் தளத்துக்கும் இடையில் உள்ள பவளக்கால் 48 ஐங் கோணங்களுக்கும் சமமாக வைத்து மேல் பந்தல் சொக்கட்டான் வேலை கலைச்சிறப்பு அமைப்பு கூடியதாகவும் அரண்மனை அமைப்புப் போன்றும் அமைக்கப்பட்டுள்ளது. பஞ்சம விநாயகர், தேரில் வீற்றிருக்கும் போது எட்டுத் திக்கும் பஞ்சமுக விநாயகர் அருள்பாலிக்கும் பொருட்டு அமைந்துள்ளது என்பது மற்றொரு அம்சமாகும்.

தேரில் அமைந்துள்ள சிறப்பு அம்சம் என்னவென்றால் விக்கிரம வரியில் வேதாரணியத்தில் (இந்தியாவில்) இருந்து முற்காலத்து பிள்ளையார் அடியார்கள், விநாயகர் சிலையைக் கொண்டு வந்து ஒரு கிணற்றடியில் வைத்து பூஜை செய்து வணங்கி வந்தார்கள். கோயிலில் பூர்வீக சரித்திரம் தேரில் செதுக்கப்பட்டுள்ளது.

இச்சித்திரத்தேர் ஸ்ரீவீரகத்தி விநாயகப் பெருமானின் அருள்படி குறுகிய காலத்தில் அதாவது 4 மாதத்தில் இரண்டு லட்சம் ரூபா செலவில் முடிவுற்றது. இச் சித்திரத் தேர் ஆறுமுகம் சிற்பாலயத்தின் 72 வது நிர்மாணிப்பாகும். எல்லாம் காளி தேவியின் அருளால் வீரகத்தி விநாயகப் பெருமானின் திருவருள்பாலித்தாரே என நினைக்கும் போது அளவிலா ஆனந்தம் அடைகிறேன்.

எல்லாம் வல்ல எம் பெருமான் தன்னையே உதைப்பவர்களுக்கும், எரிப்பவர்களுக்கும் நல்லதையே செய்பவர். அந்த நம்பிக்கையின் உறுதியே வெற்றியும் அமைதியும் ஆகும்.

சிற்பகலாமணி
ஆறுமுகம் ஜீவரட்ணம்
ஆச்சாரியார்

# விநாயகர் ஆலய வரலாறு

விநாயக விக்கிரகம் வேதாரணியத்திலிருந்து வயித்திலிங்கம் கார்த்திகேசு என்பவரால் கொண்டு வரப்பட்டு (1830-1780) ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டது. அவர் தினமும் ஏழுதிரிகளை ஏற்றிய பின்னரே பூசை செய்வார்.

அவருக்குப் பின்னர் 1890 ஆம் ஆண்டிலிருந்து கார்த்திகேசு நல்லதம்பி பூசை செய்தார்.

1909 ஆம் ஆண்டு ஒரு நாள் ஆலயம் அமைக்கப்பட்டிருந்த கொட்டகை தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. அப்போது இறைவன் தனது பூசகருக்கு கனவில் தோன்றி எனது ஆலயம் எரிகின்றது என்று கூறினர். அவர் உடனே எழுந்து வந்து பார்த்தபோது எரிவதைக் கண்டு அயலவரின் உதவியுடன் தியணைக்கப்பட்டது. பின்னர் ஓட்டினால் ஆலயம் வேயப்பட்டது. கா. நல்லதம்பி காலமாகிய பின்னர் அவரின் இளைய சகோதரர் கா. சின்னத்தம்பி பூசை செய்ய ஆரம்பித்தார். அவருக்குப் பின்னர் கா. குமாரசாமியும், கா. அருணாசலமும்பூசை செய்து வந்தனர்.

பூசகர்களின் அசூசை காலங்களில் அரசடி அம்மன்கோயில் குருக்களான முத்துக்குமாரசர்மா அவர்கள் வந்து பூசை செய்வார்.

விசேஷ தினங்களில் சண்முகரத்தின சர்மா அவர்கள் வந்து பூசை செய்வார்.

ஆலய புனருத்தாரண வேலைகள் முடிந்து முதன் முதலாக 1948 ஆம் ஆண்டு ஆவணித் திருவோணத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஆலய வாசலில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரம் நடராசா குமாரசுவாமியினால் கட்டுவிக்கப்பட்டது. அதில் பொருத்தப்பட்டுள்ள மணி சரவணமுத்து தம்

(8ஆம் பக்கம் பார்க்க)

இன்றைய காலத்துக் கெடுபிடிகளில் சிக்கித் தவிக்காமல் அச்சமெதுவுமற்ற நிம்மதி நிறைந்த சூழலில் யாழ் பெருமக்கள்.
ரெலிபோன் அழைப்புக்களை தாமதமின்றிப் பெற்றிட
ரெலி குளோப்
ஆர். ஜி. கட்டடம், முதல்மாடி ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
ரெலக்ஸ்: 22466 ரெலிபோன்:-25083
ஈசி சிச (ஆறு தொடர்புகள்)

சகல வித
* இரும்புக் கம்பிகள்
* தகரங்கள்
* சீமெந்து பக்கெட்டுக்கள் மற்றும் கட்டடபொருள்கள் நியாய விலையில் பெற்றுக்கொள்ள
கீதா ஸ்ரோர்ஸ்
பலாலி வீதி, திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.

சுப்பேப் ராங்க்
SUPERB RANK
ஆங்கில மருந்து வகைகள்
பாடசாலை உபகரணங்கள்
பால்மா வகைகள் கேக் வகைகள்
பட்டர்வகைகள்
உணவுப்பொருள்கள்
இவை அனைத்தையும் ஒரே இடத்தில் தெரிவுசெய்ய சிறந்த இடம்
சுப்பேப் ராங்க்
வைத்திய ஆலோசனைகள், பார்வையிடும் நேரம் மாலை 1 மணி தொடக்கம் 6 மணி வரை
Palaly Road, Thirunelvely, JAFFNA.
பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

நியூ ரியூசன் சென்ரர்
கோண்டாவில் கொக்குவில்
A/L 86- கலை, வர்த்தக, விஞ்ஞான பாடங்களுக்கான மீட்டல் வினா விடை வகுப்புகள் நடைபெறுகின்றன.
A/L 88- வகுப்புகள் மிகவிரைவில் ஆரம்பமாகவுள்ளன.
A/L 86- சூழலியல் (Ecology) பாலா
ஆரம்பம்: 09-03-1986 பிற்பகல் 2.00 மணி

எரிபொருள் தேவைக்கு எங்களை நாடுங்கள்
A. M. R.
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

அறுசுவைமிக்க—
சிற்றுண்டி வகைகளை நேரிலும் ஓடருக்கும் பெற்றுக்கொள்ள
வேல் முருகன் தேனீர்ச்சாலை
திருநெல்வேலி சந்தி, யாழ்ப்பாணம்

சகல விதமான புடைவைத் தினுசுகளுக்கும் நியாயமான விலையில் பெற்றிட இன்றே நாடுங்கள்
ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்
HARAN TEXTILES
நியூமார்க்கெட், திருநெல்வேலி.

ஆலயங்களுக்குத் தேவையான
* சந்தனம் * விபூதி
* பூஜைப் பொருள்கள்
ஆயுள் வேத மருந்துவகைகள்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
சுந்தரம் பிறதேர்ஸ்
(பஸ் நிலையம் முன்பாக)
127, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
கிளை:- மணல்தறை ஒழுங்கை திருநெல்வேலி.
தொலைபேசி:- 24412

வாடிக்கையாளர்களே!
உங்களுக்குத் தேவையான
* மின்சார உபகரணங்கள்
* எஸ்-லோன் பைப் வகைகள்
* விவசாய மருந்துவகைகள்
* பெயின்ற் வகைகள்
* இறக்குமதி செய்யப்பட்ட விதைகள் (கரட், பீற்றூட், கோவா, B வெங்காயம்)
ஆகியவற்றுக்கு நாடுங்கள்
அபிராமி
பலாலி வீதி, திருநெல்வேலி.

* வீடியோ படப்பிடிப்பு
* கலர்போட்டோ எடுக்க, கழுவ
* வீடியோ படப்பிரதிகளை வாடகைக்குப் பெற
வீடியோ புளோசம்ஸ்
30, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்
கிளை:- த வீடியோ புளொசம்ஸ் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

கண்ணைக் கவரும்
வண்ண பெயிண்ட் வகைகளை
மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள
KALANTAN TRADERS
திருநெல்வேலி சந்தி, யாழ்ப்பாணம்.

குறைந்த கட்டணத்தில், அதி கூடிய வேகத்தில், வாடிக்கையாளரின் தொலை தொடர்புத் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்ய
யூனிவேர்சல் ரெலெக்ஸ் சர்வதேச நேரடித் தொலைபேசிச் சேவை
(பகல் இரவு முழு நேர சேவை)
உள்நாட்டு தொலைபேசி அழைப்புகள்
வெளிநாட்டு நேரடித் தொலைபேசி அழைப்புகள்
வெளிநாட்டு நேரடி ரெலெக்ஸ் சேவைகள்
வெளிநாட்டுத் தந்திச் சேவைகள்
உங்கள் வாசல் கதவு வரை எமது துரித சேவை
* இவை அனைத்துக்கும் உடன் நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம் *
யூனிவேர்சல் ரெலெக்ஸ்
550, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி முன்பாக)
TEL: 23100, 23006 TELEX: 22132 UNITEL CE

விளம்பர அமைப்பு: ஸ்ரார் வீடியோ கொம்பிளெக்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட
ஆயுள்வேத மூலிகை நூல்கள்

| | |
|---|---|
| அனுபவ வைத்திய முறைகள் 1000 | 43 75 |
| நோய் தீர்க்கும் இஞ்சி | 10.50 |
| சுக்கு, மிளகு, திப்பிலி மருத்துவம் | 12.25 |
| பல் மருத்துவம் | 12 25 |
| விஷக்கடி மருத்துவம் | 12 25 |
| சுலபமான வீட்டு வைத்தியம் | 12.25 |

பூபாலசிங்கம் புத்தகசாலை
(புத்தகக் களஞ்சியம்)
கொட்டடி - யாழ்ப்பாணம். தொலைபேசி: 24076

சஞ்சீவி

08.03.1986

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட
ஆயுள்வேத மூலிகை நூல்கள்

| | |
|---|---|
| நோய் தடுப்பு வழி முறைகள் | 15.75 |
| பூக்களின் மருத்துவ குணங்கள் | 24 50 |
| நுரையீரல் நோய்கள் | 24.15 |
| பழங்களின் மருத்துவப் பயன்கள் | 24 50 |
| உணவுப் பொருள் மருத்துவகுண அசராதி | 19 25 |
| தேனும் ஐந்து மூலிகைகளும் | 22 75 |

பூபாலசிங்கம் புத்தகசாலை (புத்தகக் களஞ்சியம்)
கொட்டடி - யாழ்ப்பாணம். தொலைபேசி: 24076

# டிக்ஸிற்: ஒரு மணி ஓசை; அவர் பின்னால் என்ன வரும்?

பருப்பு இல்லாத கல்யாணம்!

அதுவும் பங்குனியில் நடக்கப் போகிறது.

'பங்குனி' என்று சொல்லி வாழ்க்கைத் துணையைச் சேர்க்கும் பங்குனியிலா பருப்பு இல்லாத கல்யாணம் — இப்படி திகைக்காதீர்கள்.

இலங்கையில் மார்ச் 30 இல் இருந்து ஏப்ரல் 6 வரை நடைபெற இருக்கும் 'ஆசிய கிண்ண'த்துக்கான கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிதான் அந்தப் பருப்பு இல்லாத கல்யாணம்!

இலங்கை இனப் பிரச்சினை இன்று விளையாட்டு மைதானத்துக்கே வந்து விட்டது.

## உள்ளும் புறமும்

குறுமுனி

பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா, இலங்கை — இவைதான் ஆசிய கிண்ணப் போட்டியில் பங்குபற்ற வேண்டிய நாடுகள்.

இந்தியா இல்லாத 'ஆசிய' போட்டியாக வந்து விட்டது.

'பகத்'தின் பேச்சு வெறும் பகத்தின் பேச்சுத்தான்; அது பாரதத்தின் பேச்சு அல்ல — இது இலங்கையின் வாதம்.

குர்ஷித் ஆலம்கானுக்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் ஏற்பட்டது (அப்படி இலங்கை எண்ணிக் கொண்டது) போன்ற நிலைமையை உருவாக்க இலங்கை அரசு பகத்தின் பேச்சை வைத்து பகிரதப்பிரயத்தனம் செய்து

## ஆசியக் கிரிக்கட் பருப்பில்லா கல்யாணம்!

வந்தது.

இலங்கை அரசின் 'துக்குள் சார்ளி' ராஜதந்திரத்தினால் நின்று பிடிக்க முடியவில்லை.

டில்லி நாடாளுமன்றப் பேச்சு ஒரு முலைக்கு என்ற விதத்தில், ஜெனிவா ஐ. நா. மனித உரிமை சாசனக் கூட்டத்தில் இந்தியா இலங்கை இனப் பிரச்சினை பற்றிப் பேசியது.

ஜெனிவாவில் தில்லானும் 'வில்லனாக' வந்து விட்டாரே என்று மீண்டும் இந்தியாவுக்கு ஆட்சேபக் கடிதம் அனுப்ப முடியாத சூழ்நிலை இதனால் உருவாக்கப்பட்டது

இப்போது இலங்கையில் நடைபெற உள்ள ஆசிய கிண்ணச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டாம் என்று இந்திய கிரிக்கட் அணிக்கு இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்திய அமைச்சர்கள் பேசுவது தனிப்பட்ட ரீதியில் அல்ல, கூட்டுப் பொறுப்புணர்ச்சியுடன் தான் என்பதை இலங்கைக்குப் புரியவைக்க ஜெனீவா, கிரிக்கட் மைதானம் ஆகியவற்றை இந்தியா பயன்படுத்த வேண்டியதாயிற்று.

இராஜதந்திர நெருக்குதலில் அடுத்த கட்டம் இந்த வாரம் ஆரம்பமாகப் போகிறது.

அதற்கான 'போதனை'களுடன் இந்தியத் தூதர் திரு டிக்ஸிற் இன்று கொழும்பு திரும்பிகிறார்.

அடுத்தடுத்து மந்திராலோசனைகள், பிரதமர் காந்தி, மற்றும் அதிகாரிகளுடன் பல சந்திப்புக்கள். அவற்றின் பின்னர் தான் திரு. டிக்ஸிற் இலங்கை வருகின்றார்.

மணி ஓசை வருகின்றது. பின்னால் வரப் போவது என்ன?

இலங்கை அரசைப் போன்று அனைவரும் அதைத்தான் எதிர்பார்க்கின்றார்கள்.

இந்த வாரம் அந்தக் கேள்விக்குவிடை கிடைக்குமா?

'விளையாட்டும்' வினையாகின்ற காலம் அல்லவா!

### இலங்கையிடம் பாடம் படிக்க இந்தியா விருப்பம்

நுனிக்கொப்பிலிருந்து அடிக்கொப்பை வெட்டுபவனின் நிலை எப்படி இருக்கும் என்பது பலருக்குத் தெரிந்து இருக்கும்.

தெரியாதவர்கள் அதற்காகக் கவலைப்பட வேண்டியது இல்லை.

கடந்த செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றத்தில் கடுவல எம். பி. திரு. போல் பெரேரா பேசியதை வாசித்தாலே போதும். கடுவல எம்.பி. திரு போல் பெரேரா (ஐ. தே. க.):

'நாட்டைப்பிடிப்பது சுலபம், அதை வைத்து இருப்பது மிகவும் கஷ்டம் என்பதை பெரிய நாடுகளுக்கு உணர்த்த வேண்டும். ஆப்கானிஸ்தானில் இருந்து ரஷ்யா அதைப் படிக்கின்றது வியட்னாமில் அமெரிக்கா படித்தது.

இப்போது இலங்கையிடம் இருந்து இந்தியா அதைப்படிக்க விரும்புகிறது.'

## செய்திக்கொத்து

(பெப் 28 - மார்ச் 7)

வெள்ளி:

- தமிழ் நாட்டில் ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு; திமுக, திக. வடிக்கை.
- பிக்குமார் கொழும்பில் சத்தியாக்கிரகம்.

சனி:

- வடபகுதியில் ரோந்தும் சோதனையும் நடத்த உத்தரவு.
- கட்டைப்பறிச்சானில் 3 தமிழர் கொலை.
- 6,000 தமிழர் 1983இன் பின்னர் இலங்கையில் கொலை; சென்னையில் அமிர்தலிங்கம் தகவல்.

ஞாயிறு:

- கோப்பாய் தாம்போதி தகர்ப்பு
- வவுனியாவில் நிலக்கண்ணிவெடி; 10 சிப்பாய் பலி என்று மக்கள் விடுதலைப் படை அறிவிப்பு.

திங்கள்:

- வணபிதா சிங்கராயர் விடுதலைத் தீர்ப்பு.
- நயினாதீவில் கடற்கண்ணி தாக்குதலில் இலங்கைக் கடற்படைக் கப்பல் சிதறியது.

நயினாதீவில் படைகள் அட்டகாசம்; நாகபூஷணி ஆலயம் சேதம்: தேர்கள் மஞ்சம் எரிப்பு.

செவ்வாய்:

- மன்னார், பரப்புக் கடந்தான் பகுதியில் யுத்த விமானம் குண்டு வீச்சு
- கோப்பாய்-கைதடி தாம்போதி திருத்தப்பட்டது

புதன்:

- 49 தமிழர் பற்றி தகவல் இல்லை; மட்டக்களப்பு இணைப்பு அதிகாரியிடம் முறைப்பாடு
- ராணுவ முகாம் மாநாட்டுக்குப் போக விடாது கிராமசேவகர்கள் தடுக்கப்பட்டனர். 'ரெலோ' போராளிகள் நடவடிக்கை.
- இனப்பிரச்சினைக்கு தீர்வு செயலில் வேண்டும்; வாயால் சொன்னால் மட்டும் போதாது; இந்தியா இலங்கைக்கு கோரிக்கை.

வியாழன்:

- கன்னியாவில் 6 தமிழர் வெட்டிக் கொலை.
- ரஷ்ய ஏவுகணை தமிழ் விடுதலைப் புலிகளுக்கு வருகிறது - லண்டன் கார்டியன் தகவல்.
- இலங்கையில் தமிழ்ச் சமுதாயம் முழுவதையும் அழிக்கும் செயல் துவங்கி விட்டது என்று ஐ. நா மனித உரிமை சபையிடம் இந்தியா முறைப்பாடு.

# காஷ்மீரில் ஜி. எம். ஷா ஆட்சிக்கு சாவுமணி!

இந்திய மாநிலங்களில் ஒன்றான ஜம்மு காஷ்மீரில், ஜி எம் ஷா ஆட்சிக்கு அளித்துவந்த ஆதரவை இந்திரா காங்கிரஸ் விலக்கிக்கொண்டுள்ளது.

இதன்மூலம் காஷ்மீர் மீண்டும் பெரும் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கிறது.

பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நேற்று முன்தினம் அதாவது வியாழக்கிழமை முதலமைச்சர் ஜி. எம். ஷா, முன்னாள் முதலமைச்சர் டாக்டர் பாரூக் அப்துல்லா, காங்கிரஸ் துணை அக்கிராசனர் அர்ஜுன்சிங் ஆகியோரைப் புதுடில்லிக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பை அடுத்து ஜி. எம். ஷாவுக்கான ஆதரவை இந்திரா காங்கிரஸ்விலக்கிக் கொண்டதுக்கான அறிவிப்பு நேற்றுக்காலை வெளிவந்தது.

இந்து-முஸ்லிம் இனக்கலவரம், நிர்வாக ஒழுங்கீனம், ஊழல் ஆகியவற்றுக்கு மத்தியில் காஷ்மீரில் ஜி எம். ஷாவின் ஆட்சி அஸ்தமனம்அடையும் கட்டத்தை அடைந்துள்ளது.

இந்திராவின் ஆட்சிக்காலத்தின் ஒரு கட்டத்தில் காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் பதவிக் கவிழ்ப்புகள் இடம்பெற்றன.

அப்பொழுது கவிழ்ந்தவர் டாக்டர் பாரூக் அப்துல்லா. இவர் காஷ்மீர் சிங்கம், ஷேக் அப்துல்லாவின் மகன். இவரைப் பதவி கவிழ்த்தவர் தான் இந்த ஜி எம். ஷா

பாரூக் அப்துல்லாவின் தேசிய பேரவைக் கட்சியிலிருந்து தனது ஆதரவாளர்களுடன் பிரிந்து இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களின் ஆதரவுடன் ஜி. எம். ஷா முதலமைச்சர் ஆனார்.

அன்றிலிருந்து நேற்று முன்தினம்வரை இந்திரா காங்கிரஸ் இவரது ஆட்சிக்கு முட்டுக் கொடுத்து வந்தது.

ஜி எம். ஷாவின் ஆட்சிக்கு எதிராக பலவித மான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

சமீபத்தில் இந்து-முஸ்லிம் கலவரங்களின்போது சிறுபான்மையினரான இந்துக்களைப் பாதுகாக்க அவரது ஆட்சி உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் ஒரு குற்றச்சாட்டு.

ராஜீவ் காந்தியின் கோட்டையாகக் கருதப்படும் உத்தரப்பிரதேசத்தின் அயோத்தி மாநகரில் ஏற்பட்ட ஒரு பிரச்சினையின் எதிரொலியே காஷ்மீரில் மட்டும் அல்ல பாகிஸ்தானிலும் இந்துக்கள் தாக்கப்படுவதற்கு காரணமாக அமைந்தது.

ஸ்ரீராம ஜென்ம பூமியான அயோத்தியில் ஸ்ரீராமர் கோயில் ஒன்று இருக்கிறது. மொகலாய மன்னர் ஆட்சிக் காலத்தில் இக்கோயில் பள்ளிவாசலாக மாற்றப்பட்டது.

மொகலாய ஆட்சி அஸ்தமனத்துக்குப் பின்னர் தமது கோயிலுக்கு இந்துக்கள் தொடர்ந்து உரிமை கோரி வந்தனர்.

1951ஆம் ஆண்டு இது தொடர்பான ஒரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு இழுபறி நிலையில் இருந்து வந்தது.

தற்போது அதனை மீண்டும் இந்துக் கோயிலாக பாவிக்கலாம் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

இதனை எதிர்த்தே இந்துக்களுக்கு எதிரான கலவரம் காஷ்மீரில் மட்டும் அல்ல பாகிஸ்தானிலும் பரவ ஆரம்பித்தது.

1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த நாள் தொடக்கம் காஷ்மீர் இந்தியாவின் கொந்தளிக்கும் எரிமலையாக இருந்து வருகிறது.

இந்திய—பாகிஸ்தான் யுத்தத்துக்கும் காஷ்மீர் தான் காரணமாக இருந்தது.

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்த மாநிலம் இந்தியாவின் சந்தேகத்துக்கு உரிய ஒரு மாநிலமாகவே இன்னும் இருந்து வருகிறது.

காலஞ்சென்ற ஆசிய ஜோதி ஜவஹர்லால்நேரு காலத்தில் காலஞ்சென்ற காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லா நீண்ட காலம் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். இந்திராவின் ஆட்சிக்காலத்தில் ஓர் அரசியல் உடன்பாட்டின் பேரில் ஷேக் அப்துல்லா விடுதலை செய்யப்பட்டு முதலமைச்சராகவும் பதவி ஏற்றார்.

தந்தையின் மறைவுக்கு பின்பே டாக்டர் பாரூக் அப்துல்லா முதல்வரானார்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் டாக்டர் பாரூக் அப்துல்லா மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்பாரா? அல்லது பாரூக் அப்துல்லாவின் ஆதரவுடன் இந்திரா காங்கிரஸ் காரர் ஒருவர் முதலமைச்சர் ஆவாரா? என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

## உலக உலா

என்.பி.சீலன்

## விநாயகர்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பிப்பினையினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ள விக்கிரகம் சி. நடராசா, கா. நல்லதம்பி ஆகியோரின் உதவியுடன்வவுனியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு 8-6-66இல் ஸ்தாபிக்கப்பட்டது.

இங்குள்ள மூஷிகம், பலிபீடம் என்பன 8-8-67இல் அமைக்கப்பட்டன.

24-02-81 இலிருந்து அலங்கார உற்சவம் ஆரம்பிக்கப்பட்டது.

பொதுமக்களின் உதவியுடன் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் 1-6-82 இல் நடைபெற்றது.

கொடியேற்றவைபவம் 6-3-85இல் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது இவ்வாலயத்திற்கு பிரதம குருக்களாக இருக்கும் வை ஜெகதீஸ்வரசர்மா அவர்களே 1965ஆம் ஆண்டிலிருந்து தினமும் பூசைசெய்துவருகின்றார்.

இவ்வருடம் இவ்வாலயத்திற்கென ஆச்சாரியார் திரு. ஆ. ஜீவரத்தினம் அவர்களால் புதிய தோர் சித்திரத்தேரும், சப்பறமும் உருவாக்கப்பட்டுள்ளன.

இவ்வாலயத்தின் அருகே இருக்கும் கிணறு மிகப் பழைமை வாய்ந்தது. இதனாலேயே இவ்வாலயத்தைப் பழங் கிணற்றடிவீரகத்தி விநாயகர் என அழைப்பர்.

## பொருளியல் ..

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நாடுகளில் புதிய அபிவிருத்திகள் ஏற்படும் போது பொருத்தமற்றதாக மாறிவிடும் எனக் கூறுகின்றனர். எனவே தான் பேராசிரியர் குன்னர் மிர்டால் (Gunnar Myadal) பொருளியல் பற்றிய வரைவிலக்கணங்கள் பலனற்றன என்றார். ஏனெனில் எந்த ஒரு பொருளியலாளனும் பொருளியல் கோட்பாடுகளை பொருளியல் என்றால் என்ன என்ற வரைவிலக்கண வட்டத்துள் நின்று ஆராய்வதில்லை. பொருளியல் பிரச்சினைக்கு தீர்வு காண முற்படுவதுமில்லை. எனவே பொருளியலுக்கான வரைவிலக்கணத்தை விட்டு, பொருளியல் பாடத்துள் அடக்கப்பட்ட விடயங்களை ஆராய்வதன் மூலம் பொருளியல் என்றால் என்ன என்பதற்கு விடை காண முடியும்.

## நாணய மாற்று விவரம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகின்றது.

(இது நேற்றைய மாற்று விகிதமாகும்)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 38. 77 |
| அமெ. டாலர் | 27. 36 |
| இந்திய ரூபா | 02. 22 |
| மார்க் (ஜெர்மனி) | 12. 05 |
| அவுஸ். டாலர் | 18 92 |
| கனடா டாலர் | 19 10 |
| பிராங் (பிரெஞ்சு) | 03. 91 |

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்று உமா எக்ஸ்போட்ஸ் லிமிடெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியீட்டு திகதி 08-03-1986.

கன்னியாப் படுகொலை

# 6 பேர் மரணம் பற்றிய விசாரணை ஒத்திவைப்பு

## கண்கண்ட சாட்சி இல்லை

திருகோணமலை, மார்ச் 8

கன்னியா, மாங்காயூற்றுப் பகுதியில் வெட்டுக் காயங்களுக்குள்ளாகி இறந்த ஆறு தமிழர்களின் மரணம் சம்பந்தமான விசாரணைகள் எதிர்வரும் திங்கட்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டன.

இக் கொலைச் சம்பவங்களைக் கண்ணால் கண்ட சாட்சிகள் எவரும் இல்லாததனால் நேற்று மரண விசாரணைகள் நடைபெறவில்லை.

இதனிடையில், சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

செல்வநாயகபுரம் வாசியான ஒரு பெண்ணின் சடலம் மட்டும் காட்டினுள் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

ஏனைய சடலங்கள் கன்னியாவில் உள்ள அரிசி ஆலையின் அறை ஒன்றினுள் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆலை உரிமையாளர் ஜனாப் எம். ஆப்தீன் வியாழன் காலை சென்று அரிசி ஆலை அறையைத் திறந்தபோது சடலங்களைக் கண்டார். உடனே பொலீஸுக்குத் தகவல் கொடுத்தார். இப்படி பொலீஸ் விசாரணைகளில் தெரியவந்தது.

இறந்த மலையகத் தமிழர் குடும்பங்கள் விவரம் வருமாறு;

றத்தன் காளிமுத்து (வயது 57) அவரின் மனைவி காளிமுத்து பாக்கியம் (வயது 53) இவர்களின் பேத்தி சந்திரகுமாரி (வயது 6).

இது ஒரு குடும்பம்.

அழகன் சின்னச்சாமி (வயது 65). அவரின் மனைவி சின்னச்சாமி நல்லம்மா, (வயது 55).

இது இரண்டாவது குடும்பம்.

இறந்த இன்னொரு பெண்ணான முருகையா தவமணி (வயது 43). இவர் செல்வநாயகபுரம் வாசி.

இவருடன் சேர்ந்து காட்டுக்கு விறகு வெட்டச் சென்றதாகக் கருதப்படும் காளி என்ற 23 வயது இளைஞனை காணவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

## ஆதாரமற்ற....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

இலங்கையின் ஆட்சேப அறிக்கை ஆதாரமற்ற, கெடுபிடித்தனமான குற்றச்சாட்டுக்களைக் கொண்டது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் மீது அளவுக்கு மீறிய பழிச் சொற்களை இலங்கை அறிக்கை கொண்டுள்ளது.

இலங்கை அறிக்கையின் தாற்பரியம் குறித்து இந்தியா அச்சத்துடனை திகைப்பு அடைகின்றது.

இப்படியான அறிக்கைகள் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்குக் கொஞ்சமும் உதவாது.

1983க்கு பின்னர் இலங்கையில் இருந்து தமிழ் அகதிகள் இந்தியா வந்து கொண்டு இருக்கின்றனர்.

அப்படியிருந்தும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு இந்தியா இலங்கைக்கு உதவிக் கொண்டு தான் வருகின்றது—

இவ்வாறு திரு. [illegible]ரத்தினவிடம் [illegible] கூறப்பட்டது.

## யாழ்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

நன்மை கருதி வழங்கப்பட்ட இந்தச் சலுகையைத் துஷ்பிரயோகம் செய்து பலர் பார்வையாளர் நேரம் தவிர்ந்த வேளைகளில் ஆஸ்பத்திரி வார்ட்டுகளுக்குச் சென்றும், மற்றும் சிகிச்சைப் பகுதிகளுக்கு உள்ளும் நடமாடி வந்தனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு ஆஸ்பத்திரியில் அசம்பாவிதம் ஒன்று நிகழ்ந்தது. அதனால் ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு கஷ்டமும், பிரச்சினையும் ஏற்பட்டன.

அதன் காரணமாக இனிமேல் பார்வையாளர் நேரம் [illegible] நேரங்களில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவிலோ, அல்லது அவசர சிகிச்சைப் பிரிவிலோ வெளியார் எவரும் நடமாடத் தடை விதிக்க முடிவு செய்யப்பட்டதாக [illegible] கள் நேற்றுத் தெரிவித்தார்.

## தமிழ் ஈழ....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

அவை குறைகள் அல்ல; நோயின் அறிகுறிகள் என்று. இதற்குச் சரியான அதிகாரப் பகிர்வு தான் ஒரே வழி.

— இப்படி திரு. சிவசிதம்பரம் பேட்டியில் சொன்னார்.

## புதிய ஆசிரியர்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்ப ஏற்றிவிட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 1985—86 இல் ஆசிரியர் நியமனம்பெற்ற ஆசிரியர்களைச் சந்திக்க கல்வி அமைச்சின் அனுசரணையுடன் இந்தக் கூட்டம் நேற்றுக் காலை நடக்க ஏற்பாடாகியிருந்தது.

கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்தில் இச் சந்திப்பு இடம் பெறும் என்றும் —

கிளிநொச்சி இணைப்பு அதிகாரி கேர்ணல் டி. எல் கொப்பேகடுவ சந்திப்பில் கலந்துகொள்வார் என்றும் மாவட்டக் கல்விப் பணிப்பாளர், நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு அறிவித்து இருந்தார்.

# அகதிகள் செலவு: "நாமும் கேட்போம்"

## என்கிறார் அத்துலத்

கொழும்பு, மார்ச் 7

இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைப் பராமரிக்கும் செலவை இலங்கையும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி இந்திய அரசு பரிசீலனை செய்கிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது அல்லவா!

அது பற்றி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்று நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்டார்.

அமைச்சர் சொன்னதாவது;

இந்தியா அப்படிக் கேட்கப்போவது உண்மை என்று சொன்னால்; இங்குள்ள இந்தியப் பிரஜா உரிமை பெற்றவர்களைப் பராமரிக்கும் செலவை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று இந்தியாவை இலங்கையும் கேட்க முடியும்.

இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார்.

## சித்திரத்தேர் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றின் வெள்ளோட்டம் இன்று பிற்பகல் 3. 25க்கும் 4 55க்கும் இடைப்பட்ட சுபவேளையில் நடைபெற உள்ளது.

திருநெல்வேலி 'ஆறுமுகம் சிற்பாலயம்' ஸ்தபதி சிற்பகலாமணி ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியார் தலைமையிலான குழுவினால் சித்திரத்தேர், சப்பறம் ஆகியன உருவாக்கப்பட்டன.

வெள்ளோட்ட விழாவில் யாழ் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு. வே. ந. சிவராசாவின் சிறப்புரையும் இடம்பெறும்.

# மலையகத்தில் தமிழ் இளைஞர் கைது

கொழும்பு, மார்ச் 8

மலையகப் பகுதியில் மீண்டும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த வியாழன் பொகவந்தலாவையில் மட்டும் 18 மலையகத் தமிழர் கைது செய்யப்பட்டனர்.

## நீத்தார் பட்டியல்

### முதலியார் வை. மகேசன்

முதலியார் வை. மகேசன். என் வைத்திலிங்கம் அன். கம்பனி இயக்குநர் சிவபதம் அடைந்துவிட்டார். இவர் காலம் சென்ற பொன்மணி, இராசமணி ஆகியோரின் அன்புக் கணவரும் காலம் சென்ற மங்களாம்பிகை, கணேசன், நடேசன், புவனேந்திரன், லலிதாம்பிகை, காலம் சென்ற வரதராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா, சுபத்திராதேவி, சுபத்திரா. சரோஜினி, கணேசு, வசந்த மல்லிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனனி, சசிதரன், துஷியந்தரன், ஹாஷினி, சாமினி, கிரிதரன், தருணி, பகீரதன், ஈசாணி ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 9 - 3 - 1986 ஞாயிற்றுக்கிழமை காலை 9·30 மணிக்கு "லிங்கவாசா" இல்லத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

"லிங்கவாசா"
முதலியார் மகேசன் வீதி,
நவாலி,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org